பக்கங்கள்: 24 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 13 ஞாயிற்றுக்கிழமை 27.06.2021 கதிர் 234

இனி அது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணத்தில் ஆட்டையைப் போடும் அரசியல்வாதியின் ஒழுங்கீனமான செயற்பாடுகளுக்கு 'செக் மேட்' வைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது குறித்து நேற்றுக் கோடி காட்டியிருந்தேன். ராஜபக்ஷ ஆட்சிப் பக்கம்02

# கௌதாரிமுனை கடல் பிரதேசத்தில் கடலட்டைப் பண்ணையில் சீனர்கள்!

## யாழ்ப்பாணத்தவர்களின் பெயரில் அனுமதி




(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம், ஜூன் 27

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரியை அண்டி கௌதாரிமுனைப் பகுதிக்குள் சீனா புகுந்துள்ளதாக அப்பகுதி மீனவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அப்பகுதியில் யாழ்ப்பாணத்தவர்களினது பெயரில் அனுமதி வழங்கப்பட்டு புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் கடலட்டை பண்ணை ஒன்றில் சீனர்கள் பலர் நிலை கொண்டு பணியாற்றி வருகின்றனர் எனத் தெரிகின்றது. 06

## இலங்கையில் மேலும் 43 பேர் கொரோனாவால் உயிரிழப்பு

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 43 உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 25 ஆண்களும், 18 பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரசதகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சாவடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 905 ஆக அதிகரித்துள்ளது.

## யாழ்.மாவட்டத்தில் 41 பேர் உட்பட வடக்கில் 45 பேருக்கு கொரோனா

யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த 41 பேர் உட்பட வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 45 பேருக்கு நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 579 06

## 1,801 பேருக்கு நேற்று தொற்று

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,801 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 51 ஆயிரத்து 727 ஆக எகிறியுள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 16 ஆயிரத்து 840 06

## எரிபொருள் விலை குறைக்கப்பட்டால் நம்பிக்கையில்லாப் பிரேரணை வாபஸ்

### சஜித் அணி தெரிவிப்பு




அதிகரிக்கப்பட்டுள்ள எரிபொருள்களின் விலை மீள குறைக்கப்படுமானால் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை மீளப்பெறுவதற்குத் தயார் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளரான பஸில் ராஜபக்ஷ 06

## வடமராட்சி கிழக்கில் மணல் அள்ள அனுமதி; மணல் கொள்ளைக்கு வழி செய்யும் ஏற்பாடா?

### 200 கியூப்பின் பெயரில் 2,000 கியூப் சூறையாடப்படலாம்

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம்,ஜூன் 27

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்குப் பகுதியில் மணல் அகழ்வதற்கு இடமளிக்கும் நடவடிக்கை இடம்பெறுவதாக அப்பகுதிப் பொது அமைப்புக்களைச் சேர்ந்தோர் ஆதாரத்துடன் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் மருதங்கேணி பிரதேச செயலாளரின் பரிந்துரை கனியவளத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, கனியவளத் திணைக்களமும் அதன் சிபார்சை மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பி வைத்துள்ளது. இதன் அடிப்படையில் முதல் கட்டமாக 200 கியூப்பிற்கே பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பரிந்துரைக்கப்பட்ட இருநூறு கியூப் மணலை மட்டும்தான் இவர்கள் அகழ்வார்கள் என்பதனை உறுதி செய்ய முடியாத நிலமையே இருப்பதோடு இருநூறு கியூப்பிற்கான அனுமதியை பெற்று 2 ஆயிரம் கியூப் மணலை அகழ்வதே கடந்தகால வரலாறாகவுள்ளது.

இந்த 200 கியூப்பில் சில முக்கிய தேவையான வடமராட்சி வைத்தியசாலை மற்றும் ஆலயக் கட்டடப் பணிகள் 06

## மூடப்பட்டிருக்கும் பல்கலை விடுதிகள் கொவிட் சிகிச்சை நிலையங்களாகும்!

### நெருக்கடியைச் சமாளிக்கத் தயாராகின்றது அரசு

கொழும்பு, ஜூன் 28

அவசர தேவை ஏற்பட்டால் நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களைக் கொரோனாச் சிகிச்சை நிலையங்கள் மற்றும் தற்காலிக வைத்தியசாலைகளாக மாற்றும் நடவடிக்கைகளில் அரசு இறங்கியிருப்பதாகத் தெரியவருகின்றது.

ஜனாதிபதி செயலகத்தின் விசேட அறிவுறுத்தலுக்கு அமைய கல்வி அமைச்சு இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக அறிய வருகிறது.

ஜனாதிபதியின் செயலாளர் பி.பி. ஜெயசுந்தரவினால் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் உள்ள பயன்படுத்தப்படாத, பாவனையில்லாத, பகுதியாகப் பயன் படுத்தப்படும் கட்டடங்களின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு கல்வி அமைச்சின் 2

## அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அதிரடியாகக் களமிறங்கும் பஸில்

### இரகசிய சந்திப்பில் ராஜபக்ஷக்கள் தீர்மானம்



இலங்கையில் நடைபெறவுள்ள அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வரான அமைச்சர் நாமல் ராஜபக்ஷ போட்டியிட மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மாறாக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஸ்தாபகரான பஸில் ராஜபக்ஷ அதில் போட்டியிடவுள்ளார் 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பீடத்தின் – கோட்டாபய அரசின் – நடவடிக் கைகளை யாழ்ப்பாணத்தில் தன்னுடைய செயற்பாடுகளாகக் காட்டி அரசியல் லாப மும் ஸ்டண்ட்டும் அடிக்கும் இந்த 'அமுல் பேபி' குறித்து புலனாய்வு வட்டாரங்கள் மூலமும் அரசுத் தலைமை தகவல்க ளைத் திரட்டியிருப்பதாகத் தெரிகின்றது. அதன் விளைவே 'செக் – மேட்' வைக்கும் அதிரடி நடவடிக்கை.

அரசு மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குகின்றது. வீட்டுத் திட்டங்களுக்கு நிதி உதவி வழங்குகின்றது. இவற்றை எல்லாம் முறையற்ற வகையில் அரசி யல் லாபத்துக்குப் பயன்படுத்தும் ஒரு 'மாபியா' கும்பல் பாணி நடவடிக்கையில் அமுல்பேபி குழு அட்டகாசம் புரிவதை அரசுத் தலைமை காலம் தாழ்த்தித்தான் அறிந்து கொண்டிருக்கின்றது.

அரச அதிகாரிகளை மாபியாப் பாணி யில் அச்சுறுத்தி, அடக்கி, அடாவடித்தனம் பண்ணுவதில் தொடங்கி எல்லாம் கட்ட விழ்கின்றன.

பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக நிவாரணம் வழங்க வேண்டுமா? அமுல் பேபியின் அடியாள் பட்டாளம் கொடுக்கும் பட்டியலுக்குத்தான் நிவாரணம் வழங்க வேண்டும். வீட்டுத் திட்ட உதவியா? ஆட்டையைப்போட்டு அரசியல்வாதியின் எடுபிடிகள் வழங்கும் பட்டியலை மட்டுமே பிரதேச செயலர்கள் அங்கீகரித்து மேலி டத்துக்கு அனுப்ப முடியும்.

வெளியாள்கள், பொது நிறுவனங்கள் போன்ற தரப்புகள் செயலகம் மூலம் வழங்கும் நிவாரணம் கூட 'ஆட்டையைப் போட்ட' அரசியல்வாதியின் ஒழுங்கில் வழங்கப்படுவதாகவே காட்டப்பட வேண்டும்.

இதற்கெல்லாம் இணங்காத அரச அதி காரிகள் பந்தாடப்படுவார்கள். இதுதான் உண்மை நிலைமை.

எந்த அபிவிருத்தி நடவடிக்கை என் றாலும் படத்துக்கு போஸ் கொடுத்து ஆரம்பித்து வைப்பதோ, திறந்து வைப் பதோ அமுல்பேபியாக மட்டுமே இருக்க வேண்டும் என்ற கடும் உத்தரவு அரச அதிகாரிகளுக்கு.

இந்த அச்சுறுத்தலுக்குப் பயந்து ஜால்ரா போடும் – முதுகுத் துணிவற்ற – அல்லது பந்தம் பிடித்துத் தம் கைவரிசை யைக் காட்டி தாம் 'உழைத்து' கொள்ளும் – நிர்வாகத் திறனோ, தனித்துவமான ஆளுமையோ அற்ற – அரச அதிகாரிகள் தலைமையில் இருப்பதால் 'என் கனவு யாழ்' திட்டம் கனகச்சிதமாக முன்னெடுக் கப்படுகின்றது.

சரி, இப்படி அரசின் திட்டங்களை ஆட் டையைப் போட்டு, தனக்கு அரசியல் லாப மாக்கும் இந்த அதிகாரி அதன் மூலம் மொட்டுக் கட்சியின் அல்லது அதன் கூட் டுக் கட்சிகளின் ஒன்றின் செல்வாக்கை வடக்கில் பெருக்கிக் கொள்கின்றார் என் றால் அதையாவது ஆட்சிப்பீடம் சகித்துக் கொள்வதில் நியாயம் இருக்கும்.

ஆனால், இந்த அரசியல்வாதி தனது செல்வாக்கை வளர்த்து, தனது சொந்த அரசியல் கட்சி ஒன்றைப் பதியும் நடவ டிக்கை எடுத்து வருகின்றார் என்ற புல னாய்வுத் தகவல் அரசு மேலிடத்துக்குச் சென்றிருக்கின்றது.

இவரின் 'உழைப்பு' பற்றியும் ஒரு புலனாய்வு விசாரணை தனியாக நடப்ப தாகத் தகவல் உண்டு.

ராஜபக்ஷக்களில் ஒருவரான பஸில் கடந்த வாரங்களில் அமெரிக்காவில் இருந்த போது இலங்கையில் தொடர் பாடல் துறையில் உள்ள முக்கிய நபர் ஒருவருடன் தொடர்பு கொண்டு சில அரச செயற்பாடுகளைத் தமது 'பிஸ்னஸ்' போல காட்டி இவர் முன்னெடுக்கின்றமை பற்றி விலாவாரியாக விசாரித்துள்ளார் எனவும் நான் அறிந்தேன்.

இந்த அரசியல்வாதியும் அவரைச் சூழவும் நிற்கும் கும்பலும் அரச அதிகாரி களை அச்சுறுத்திப் பண்ணும், அராஜகம், அடாவடித்தனங்கள், அந்த அரசியல் வாதியின் கும்பலுக்குக் காவடி தூக்கும் அரச அதிகாரிகள் பற்றி எல்லாம் விரி வான விவரங்கள் இப்போது ராஜபக்ஷக் களின் கைகளில்.

பிரதமர் ராஜபக்ஷவும், மகன் அமைச் சர் நாமல் ராஜபக்ஷவும் இவ்விடயங்க ளால் எரிச்சலடைந்துள்ளனர்.

அதனால் விடயங்களை நேரில் கையாள்வதற்கு தங்களின் அதிகாரம் பெற்ற ஒரு பிரதிநிதியை நேரடியாக யாழ் அனுப்பி உள்ளனர்.

அவர் ஸாம்பிளுக்கு முதல் எடுத்த 'கேஸ்'தான் சாவகச்சேரியில் வீட்டுத் திட்ட பயனாளிகள் தெரிவுப் பட்டியல். விசார ணையில் அமுல்பேபியின் கையாள் களின் திருகுதாளம் அம்பலமாகியுள்ளது. அச்சுறுத்தலுக்குப் பயந்து – பணிந்து – அரச அதிகாரிகள் இந்த ஊழலுக்குத் துணை போனமையும் தெரிய வந்துள்ளது.

அமுல்பேபியின் அராஜகங்களுக்குச் 'செக்' வைக்க இந்த அலுவலரை ராஜ பக்ஷக்கள் கொழும்பில் இருந்து அனுப் பினால், அந்த அலுவலரின் பெயரைச் சீரழிக்கும் சதித் திட்டம் ஒன்றுக்கு ஊடகம் ஒன்றின் மூலம் அமுல்பேபி தரப்பு முயன் றமை வெளிப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட சதிக்கான ஒலிப்பதிவு சிக்கியமையை அடுத்து ராஜபக்ஷக்களில் ஒருவர் கடும் சீற்றத்தில் இருக்கின்றார் என்று தெரி கின்றது.

அமுல்பேபி இனி அடக்கி வாசிக்க வேண்டியிருக்கும். அத்துடன் சூழவிருக் கும் அட்டகாச – அராஜக – கும்பலும், தவ றுகளுக்குத் துணை போய் லாபங்களை ஈட்டிக் கொள்ளும் அரச அதிகாரிகளினது வால்களும் ஓட்ட நறுக்கப்படும் என்றும் தெரிகின்றது.

அமுல்பேபியின் அராஜகங்கள் தொடர் பில் ராஜபக்ஷக்களின் கண்களைத் திறந்து விட்டமையில் அமைச்சர் ஒருவ ருக்கும் சத்தம் சந்தடியற்ற – நாசூக்கான – பங்கிருப்பதாகத் தெரிகின்றது.

அமுல்பேபியின் எகிறல் அடங்காவிட் டால், அது அடக்கப்படும் என்பதுதான் இப்போதுள்ள நிலைமை. இன்னும் அதி கம் தெரியும். வேளை வரும் போது பகிருவேன்.

★ ★ ★

தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒன்றி ணைத்துச் செயற்படும் ரெலோவின் முயற்சி எதிர்பார்த்த முன்நகர்வைக் காட்ட வில்லை. முக்கிய கட்சிகளின் தலைவர் களுடன் 'சூம்' வழியில் இன்று மாலை ரெலோத் தலைவர் செல்வம் அடைக்கல நாதன் நடத்த எண்ணியிருக்கும் உத் தேசக் கூட்டம் இன்று பெரும்பாலும் நடக் காது என்றே தோன்றுகின்றது.

இந்தக் கூட்டத்துக்கு மாவை சேனாதி ராசா (தமிழரசு), சித்தார்த்தன் (புளொட்), கஜேந்திரகுமார் பொன்னம்பலம் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி), நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் (தமிழ் மக்கள் கூட் டணி), சுரேஷ் பிறேமச்சந்திரன் (ஈ.பி.ஆர். எல்.எவ்.) ஆகியோருக்கு அழைப்பு விடுக் கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் கொள்கை நிலைப்பாட்டில் இல்லை என்று தெரி கின்றது.

தமிழரசுத் தலைவர் மாவை சேனா திராசா பம்முகின்றார். நேற்றிரவு வரை இந்த அழைப்புக் குறித்து அவர் பிரதி பலிப்பு ஏதும் காட்டவில்லை. அழைப் பைப் பார்க்காதவர் போல உதாசீனப் போக்கில் அவர் நடக்கக் கூடும். தன்னை விட வேறு ஒருவர் இந்த முன்முயற்சியை எடுப்பதால், தனது முன்னிலைமை புறம் ஒதுக்கப்பட்டு விடும் என்ற கவலை அவ ருக்கு.

சித்தார்த்தனைப் பொறுத்தவரை எல்லாக் கட்சியினரும் பங்குபற்றினால் தாமும் பங்கு பற்றுவார் என்ற 'பொஸிட் டிவ்' சிந்தனையில் அவர் இருக்கின்றார் எனத் தெரிகின்றது.

நீதியரசர் விக்னேஸ்வரனைப் பொறுத்த வரையில் தமது கூட்டணியில் உள்ள சிறிகாந்தா – சிவாஜியின் தமிழ்த் தேசியக் கட்சி, அனந்தி சசிதரனின் ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் போன்றவை இந்தத் தமிழ்த் தேசியக் கட்சியின் ஒன்று கூடலுக்கு அழைக்கப்படாத நிலையில் அதில் பங்கு பற்றும் எண்ணம் அவருக்கு இல்லை எனத் தெரிகின்றது.

ஆனால், *"இது பூர்வாங்கக் கலந்துரை யாடலுக்கான அழைப்புத்தான். இது பேச்சல்ல; பேச்சுக்கான பேச்சு மட்டுமே. இந்தப் பூர்வாங்கக் கலந்துரையாடலில், யார், யாரைப் பேச அழைக்க வேண்டும், எப்போது, என்ன அடிப்படையில் பேசுவது என்பவை பற்றி மட்டுமே பேசுவோம். சிறிகாந்தா – சிவாஜி, அனந்தி சசிதரன், ஐங்கரநேசன், வேலன் சுவாமி, ஜனநாய கப் போராளிகள் கட்சியினர் என யார், யாரையாவது சேர்த்துக்கொள்ள வேண் டும் எனப் பூர்வாங்க கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டால் அவை எல்லாம் சாத கமாகப் பரிசீலிக்கப்பட்டு முடிவு எடுக்கப் படும். எனவே யாரும், யாரையும் ஒதுக்கி விட்டார்கள் என்றோ, போதிய முன்னறி வித்தல் தரப்படவில்லை என்றோ குழம் பத் தேவையில்லை. எல்லாக் கருத்துக்க ளையும் உள்ளடக்கி, எல்லோருடைய நேர வசதிகளையும் சாதகமாகப் பரிசீலித்து, இணக்கமான நடவடிக்கை எடுத்து முன் னேறுவோம். நாளை (இன்று) ஞாயிற் றுக்கிழமை திட்டமிட்டபடி பூர்வாங்கக் கலந்துரையாடலை நடத்த முடியாமல் போனால், எல்லோரையும் அரவணைத்து அவர்களுக்கு ஏற்ற – பொருத்தமான – பிறிதொரு தினத்தில் இந்தக் கலந்துரை யாடலை நடத்தி, தமிழ்த் தேசியக் கட்சி களை ஒன்றுபட்டு செயற்பட வைக்கும் எமது முயற்சிகளை வெற்றிகரமாக முன் நகர்த்துவோம்."* – என்றார் ரெலோவின் தரப்பில் குரல் தரவல்ல மூத்த தலைவர் ஒருவர்.

அவரின் இந்தக் கருத்தில் ரெலோ உறுதியாக இருக்கும் என்றால் – இதுதான் அவர்களின் தெளிவான நிலைப்பாடு என்றால் – இந்த முயற்சியில் பல வெற்றி கரமான கட்டங்களை தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபட்டுத் தாண்டும் என்று நம்பலாம் என நான் கருதுகிறேன்.

நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

– மின்னல் –

## மூடப்பட்டிருக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மேலதிக செயலாளர் ரி.பி.எம். அத்தப்பத்து வினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரிடம் கோரப் பட்டுள்ளது. இந்த விவரங்களை நேரடியாக ஜனாதிபதியின் செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

மேலும், உலகளாவிய ரீதியில் அதிகரித் துவரும் கொரோனா பெருந்தொற்று இலங்கை உட்பட பெரும்பாலான நாடு களுக்குச் சவாலாக மாறியுள்ளது. இலங் கையில், இப் பெருந்தொற்றுச் சவாலை எதிர்கொள்ளத்தக்க வகையில் சுகாதாரப் பகுதியை மேலும் ஸ்திரப்படுத்த வேண் டிய அவசர நிலைமை எழுந்துள்ளது. அதற்காக தனிமைப்படுத்தல் நிலையங் கள், கொரோனா சிகிச்சை நிலையங்கள், தற்காலிக வைத்தியசாலைகளின் எண் ணிக்கையை அதிகரிக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. அத்துடன் வெளி இடங்களில் இருந்து வந்து கொவிட் 19 சிகிச்சை பணிகளில் ஈடுபடும் வைத்தி யர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்க ளுக்கு அந்தந்த இடங்களில் தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண் டிய தேவையும் எழுந்துள்ளது.

எனவே, தங்கள் அமைச்சின் கீழ் வருகின்ற திணைக்களங்கள், நிறுவனங் களின் கட்டுப்பாட்டில் உள்ள கட்டடங்களில் பயன்படுத்தப்படாத, பாவனையில்லாத, பகுதியாகப் பயன்படுத்தப்படும் கட்டடங் களின் விவரங்களை ஜனாதிபதி செயலகத் துக்கும், தேசிய கொவிட் 19 தடுப்புச் செய லணிக்கும் அனுப்பி வைக்குமாறு ஜனாதி பதியின் செயலாளரினால் கல்வி அமைச் சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்துக்கு அமைவாக பல் கலைக்கழகங்களில் உள்ள கட்டடங் களின் விவரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பல் கலைக்கழகங்களிடம் கோரப்பட்டிருக் கின்றது.

கொவிட் 19 நிலைமை காரணமாக பல்கலைக்கழகங்களில் கல்வி நடவடிக் கைகள் இடைநிறுத்தப்பட்டிருப்பதனால் மாணவர், பணியாளர்கள் விடுதிகள் தற்காலிக கொரோனா சிகிச்சை நிலையங் களாக மாற்றப்படலாம் என கல்வி அமைச்சு வட்டாரங்களில் இருந்து அறியக்கிடைத்தது.

## அடுத்த ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

என்று நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தகவல் கிடைத்துள்ளது. ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் சபாநாயகரும் அமைச்சருமான சமல் ராஜபக்ஷ உள்ளிட்ட வர்களுக்கு இடை யிலான இரகசிய சந்திப்பொன்று கடந்த வியாழக்கிழமை நடைபெற்றுள்ளது.

கொழும்பில் உள்ள ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷவின் மிரிஹானை இல்லத் தில் இந்தச் சந்திப்பு இரவில் நடத்தப்பட் டுள்ளது. இதன்போது, அடுத்த ஜனாதி பதித் தேர்தல் குறித்த ஆலோசனைகள் நடத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப் படுகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஸ்தாபகரான பஸில் ராஜபக்ஷவை அல் லது விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவை 2024ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் களமிறக்குவது பற்றி இந்தச் சந்திப்பில் கூடுதலாக ஆரா யப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பஸில் ராஜபக்ஷவைப் போட்டி யிட வைப்பதற்கான இணக்கப்பாட்டுக்கு ராஜபக்ஷ குடும்பம் வந்திருக்கின்றது என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

ஏற்கனவே அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வைக் களமிறக்க உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், தற்போது அந்தத் தீர்மானத் தில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது.

எதிர்வரும் மாதம் நிதி மற்றும் பொரு ளாதார அபிவிருத்தி அமைச்சராக நியமிக் கப்படவுள்ள பஸில் ராஜபக்ஷ 2024ஆம் ஆண்டுக்குள் இலங்கையின் பொருளா தாரத்தைப் பலப்படுத்துவதற்கான சவாலை ஏற்றுக்கொள்ளப்போகின்றார்.

அந்தச் சவாலில் அவர் வெற்றிய டைந்தால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலா னது மிகப்பெரிய சவாலாக அவருக்கு அமையாது என்பதே ராஜபக்ஷ குடும்பத்தி னரின் ஊகமாக உள்ளது என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முக்கியஸ்தர் குறிப்பிட்டார்.

இந்தநிலையில், 2030ஆம் ஆண்டில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலிலே மஹிந்த ராஜ பக்ஷவின் புதல்வர் நாமல் ராஜபக்ஷ போட்டியிடீ வாய்ப்பு இருக்கின்றது எனக் கூறப்படுகின்றது.

Australian Skilled Visa
Engineers (Civil & Mechanical), Engineering Diplpma holders in HNDA, NDES, NDT, C & G
Australian Skilled – Recognised Graduate Visa
BSc.Engg from University of Moratuwa or Peradeniya or Jaffna or Ruhuna
HOTLINE: 0766228891
தொடர்புகளுக்கு:-
Australian Migration Consultants
41, George R De Silva Mw, Colombo 13
0112437285, Email: sl.austvisa@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# மரண அறிவித்தல்

மலர்வு 20 - 02 - 1988



உதிர்வு 26 - 06 - 2021

# கிருபாமூர்த்தி சிந்துஜன்

(சிவன் ஸ்டோர்)

K.K.S. வீதி இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் மலேசியா, இணுவிலை வாழ்விடமாகவும் கொண்ட கிருபாமூர்த்தி சிந்துஜன் (26.06.2021) நேற்று சனிக்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் கிருபா மூர்த்தி – பிரபாவதியின் அன்பு மகனும், கீர்த்திகாவின் (ஆசிரியை – யா/பளை மத்திய கல்லூரி) அன்பு அண்ணாவும், கபிதாஸின் (Elephant House) அன்பு மைத்துணரும் சஸ்விகாவின் அன்பு மாமாவும், காலஞ்சென்றவர்களான அம்பலவானர் – மகேஸ்வரி, நடராசா – நாகம்மா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் தயாபரன் – சந்திரவதனா, மகேஸ்வரன் – கல்யாணி ஆகியோரின் அன்பு மருமகனும், ரவீந்திரன் – வனஜாவின் அன்புப் பெறாமகனும், அருண் பிரசாத், சோபிகா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சேந்தன், சௌசிகன், மாதுளன், துவாரகன், மாதங்கி ஆகியோரின் அன்பு மச்சானும், காலஞ்சென்றவர்களான சுப்பையா, வீரசிங்கம், ஆறுமுகம் சரஸ்வதி, சிவபாதம், சண்முகநாதன், ஞானேஸ்வரி, பரமேஸ்வரி, ஞானேஸ்வரன், சின்னம்மா, நாகரத்தினம், தில்லைநாயகி மற்றும் சுந்தரேஸ்வரி, திருச்செல்வம், தில்லையம்பலம் ஆகியோரின் அன்புப் பேரனும், ஆறு.திருமுருகனின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.06.2021) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:அ.கிருபா மூர்த்தி 'அக்கா அகம்'**
**K.K.S வீதி, இணுவில் மேற்கு. 0776912246**

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சமூகத் தொற்றாகும் கொரோனா

கொரோனாத் தொற்றுத் தொடர்பாக அறிவிக்கப்பட்ட முடக்கத்தைத் தளர்த்தினால் பேராபத்து நேரும், பரவல் கட்டுக் கடங்காமல் போகும் என்றெல்லாம் நிபுணர்களும், மருத்துவர்களும், சுகாதாரத் துறையினரும் எச்சரிக்கை செய்த போது அதனைப் பொருட்படுத்தாமல் முடக்க நிலையை பயணக் கட்டுப்பாடு என்று தளர்த்தியது ஆட்சிப் பீடம்.

அந்தப் பயணக் கட்டுப்பாடும் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. அரச சேவைகள் பலவும் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டு, அரச ஊழியர்கள் அனைத்து வேலைநாள்களும் கடமைக்கு அழைக்கப்பட்டனர். அத்தியாவசிய சேவைகள் என்ற பெயரில் நாடு மெல்ல மெல்ல வழமை நிலைக்குத் திரும்பும் சூழல் ஏற்பட்டது.

அப்போதும் மருத்துவ நிபுணர்கள், சம்பந்தப்பட்ட சுகாதார, வைத்திய அதிகாரிகள் அவசர எச்சரிக்கை எழுப்பினர். ஆனாலும் அரசு பொருட்படுத்தவில்லை.

பயணக் கட்டுப்பாடும் முழுமையாகத் தளர்த்தப்பட நிலைமை வழமைக்கு மீண்டது.

ஆக, பெயருக்கு மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து இல்லை என்ற பம்மாத்து நிலைதான். மேலதிகமாக திருமண நிகழ்வு, இறப்பு வீடுகள், திருவிழாக்கள், பொது நிகழ்வுகள் என்று ஒன்று கூடல்களுக்குக் கட்டுப்பாடு, அவ்வளவுதான். நகரங்களிலும், சந்தைகளிலும், வர்த்தக நிலையங்களிலும் மக்கள் ஒன்று கூடும் நிலைமை மீண்டும் ஏற்பட்டு விட்டது.

இதன் தாக்கத்தை – மோசமான விளைவுகளை – அடுத்து வரும் மாதங்களில் நாடு எதிர்கொள்ளப்போகின்றது என நிபுணர்கள் இப்போதே எச்சரிக்கத் தொடங்கி விட்டனர்.

அதனையும் விட, பிரிட்டனின் திரிவடைந்த கொரோனா வைரஸுக்கு மேலதிகமாக, இந்தியாவில் திரிவடைந்த மோசமான – வீரியம் மிக்க – பரவல் வீச்சம் அதிகம் கொண்ட – கொரோனா வைரஸும் இலங்கையில் பரவ ஆரம்பித்திருக்கும் இந்தச் சூழலில் பொது முடக்கமும், பயணக் கட்டுப்பாடுகள் போன்றவற்றை நீக்குவது மிக மிக மோசமான விளைவுகளை எதிர்கொள்ள வைக்கும் என்பது மறுதலிக்கப்படாத உண்மை. நாட்டின் யதார்த்தப்புற நிலைமை அதுதான்.

ஆனால், இந்த எச்சரிக்கை, அலார அபாய சமிக்ஞை எதனையும் பொருட்படுத்தும் நிலைமையில் ஆட்சித் தலைமை இல்லை.

பொது முடக்கம், பயணக் கட்டுப்பாடு போன்றவற்றை எக்காரணம் கொண்டும் தொடர்வதில்லை, அவற்றை நீக்குவதனால் ஏற்பக் கூடிய தொற்றாபத்துக்கு என்ன விலை கொடுக்க நேர்ந்தாலும் அதை எதிர்கொள்வதுதான், அதிலிருந்து பின் வாங்குவதில்லை என்ற ஒரே உறுதிப்பாட்டில் ஆட்சித் தலைமை இருப்பதாகத் தெரிகின்றது. அதன் நடவடிக்கைகளும் அவற்றையே பிரதிபலித்து நிற்கின்றன.

பல தரப்பு எச்சரிக்கைகளையும் ஒரேயடியாக உதாசீனம் செய்து – புறம் தள்ளி – கட்டுப்பாடுகளைத் தளர்த்தியுள்ளமையால் அடுத்த மாதத்தில் தொற்றாளர் எண்ணிக்கை எகிறும் என்ற நிலைமையைப் புரிந்து கொண்டுள்ள அரசு, அதனை எதிர்கொள்வதற்கான முன் ஆயத்தங்களில் இப்போது ஈடுபட்டிருப்பது தெரிகின்றது.

கொரோனாத் தொற்றின் முதல் அலையின் போது தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்தபோது, அவர்களை வைத்துப் பராமரிப்பதற்காக நாட்டில் உள்ள அனைத்துக் கல்விக் கல்லூரிகளையும் அரசு கொரோனாத் தொற்று நோயாளர்களுக்கான மையங்களாகவும், சிகிச்சை நிலையங்களாகவும் மாற்றியது. இந்தக் கல்விக் கல்லூரிகள் ஒவ்வொன்றிலும் பல நூற்றுக் கணக்கில் ஆசிரிய மாணவர்கள் பயிற்சி பெற்று வந்தமையினால் ஆள்கள் தங்கியிருப்பதற்கான அடிப்படைக் கட்டுமானங்களை – மலசலகூடம், குளியலறை தொடங்கி இன்னோரன்ன பிற வசதிகளை – அவை கொண்டிருந்தன. அதனால் அவற்றை சுலபமாகக் கொரோனாத் தொற்று நோயாளர்களுக்கான மையங்களாகவும், சிகிச்சை நிலையங்களாகவும் மாற்ற முடிந்தது. நாடு முழுவதிலும் பல்லாயிரம் நோயாளர்களை இந்த மையங்கள் மூலம் பராமரிக்க முடிந்தது.

இப்போது கொரோனாத் தொற்றின் மூன்றாவது அலை வேகமாகப் பரவி வருகின்றது. போக்குவரத்துத் தடைகள், கட்டுப்பாடுகளை அரசு நீக்கியிருக்கின்றமையால் அடுத்த மாதத்தில் நோய்த் தொற்று பல மடங்காக அதிகரிக்கும். அது சமூகத் தொற்றாக மாறி விட்டது என்று அறிவிக்கும் நெருக்கடி நிலைமை கூட உருவாகலாம்.

தினசரி தொற்றாளர் எண்ணிக்கை பல்லாயிரக் கணக்கில் எகிறும் போது நாட்டின் மருத்துவத்துறை அதற்கு முகம் கொடுக்க முடியாமல் படுத்து விடலாம்.

இந்த நெருக்கடிகளை ஊகித்துத்தான் கல்விக் கல்லூரிகள் போல – இப்போது நாட்டில் மூடியிருக்கும் பல்கலைக்கழகங்களை – குறிப்பாக ஆள்களைத் தங்க வைத்துப் பாரமரிக்கக் கூடிய அடிப்படை வசதிகளைக் கொண்ட பல்கலைக்கழக விடுதிகளை – கொரோனாத் தொற்று நோயாளர்களைப் பராமரிக்கும் புதிய மையங்களாக மாற்ற அரசு தயாராகின்றது என்று தகவல் வந்திருக்கின்றது. தனது முடிவின் – தீர்மானத்தின் – விளைவுகளை அரசு எதிர்கொண்டேயாக வேண்டும். அதிலிருந்து அரசு விலக முடியாது.

# வெலிகடை கைதிகளின் போராட்டம் நிறைவடைவு



வெலிகடை சிறைச்சாலையின் கூரை மீது ஏறி உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டிருந்த கைதிகள் தமது போராட்டத்தை கைவிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிறைச்சாலை ஊடக பேச்சாளர், சிறைச்சாலை ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க இதனைத் தெரிவித்தார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள மஹர மற்றும் வெலிகடை சிறைச்சாலைகளின் கைதிகள் சிலர் ஆரம்பித்துள்ள உண்ணாவிரத போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது.

அதற்கு ஆதரவு தெரிவித்து பூஸா சிறைச்சாலையில் கைதி ஒருவர் நேற்று (சனிக்கிழமை) உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மரண தண்டனையை ஆயுள் தண்டனையான மாற்றுமாறு கோரி அவர்கள் இவ்வாறு உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகள் குறித்து மட்டக்களப்பில் விசேட ஆராய்வு கூட்டம்

தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டமொன்று இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் குறித்த விசேட கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இதன்போது மட்டக்களப்பில் அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் தொற்று பரவலை கட்டுப்படுத்தும் வழிவகைகள் தொடர்பாக ஆராயப்பட்டன.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட மஞ்சந்தொடுவாய், மாமாங்கம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமையால் அப்பகுதிகளில் முன்னெடுக்க வேண்டிய பணிகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

இதேவேளை சுகாதார நடைமுறைகளை பட பின்பற்றாதவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுத்தல் மற்றும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றாத வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே.கிரிசுதன் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன், மட்டக்களப்பு மாநகரசபையின் பிரதி ஆணையாளர் உ.சிவராஜா, இராணுவம், பொலிஸ் அதிகாரிகள், உதவி பிரதேச செயலாளர்கள், திட்டமிடல் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# நாட்டில் நான்கரை லட்சம் மக்கள் ஹெரோயின், கஞ்சா பாவனையில்

நாட்டில் சுமார் நான்கரை லட்சம் மக்கள் ஹெரோயின் மற்றும் கஞ்சாவைப் பயன்படுத்துவதாகத் தெரிய வந்துள்ளது என தேசிய ஆபத்தான மருந்துகள் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

குறித்த கட்டுப்பாட்டு வாரியம் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் இது இனங்காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினம் நேற்று (சனிக்கிழமை) என்பதால் அதற்கான



பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுக்கத் தேசிய ஆபத்தான மருந்துகள் கட்டுப்பாட்டு வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

# 60 வீதமானவர்களுக்கு தடுப்பூசி ஏற்ற திட்டம்



நாட்டில் 60 சதவீதமானோருக்கு தடுப்பூசியேற்றுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்துள்ளார்.

கொவிட் தடுப்பூசியேற்றும் வேலைத்திட்டத்திற்காக அரசாங்கம் 425.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியுள்ளது.

உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியன இதற்கான நிதியை வழங்குவதற்கு உடன்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி மேலும் தெரிவித்துள்ளார்.

# மதுபோதையில் விபத்து ஒருவர் பரிதாப சாவு

யாகால பகுதியில் இருந்து பேமிரிய நோக்கி பயணித்த மோட்டார் வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று (சனிக்கிழமை) அதிகாலை 3 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மோட்டார் வாகனத்தில் மூவர் பயணித்துள்ளமையுடன் அவர்கள் அதிக மதுபோதையில் இருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார் வாகன ஓட்டுநர் தப்பிச் சென்றிருந்த நிலையில் நவகமுவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.



# திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்ட மட்டக்களப்பைச் சேர்ந்த ஒருவர் உயிரிழப்பு!



தமிழகத்தின் திருச்சி சிறப்பு முகாமிலிருந்து விடுதலை செய்யுமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டு வந்த இலங்கைத் தமிழர் ஒருவர் கடந்த வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார்.

திருச்சி - மத்திய சிறை வளாகத்திலுள்ள சிறப்பு முகாமில் 78 இலங்கைத் தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தம்மை விடுவிக்கக் கோரி இவர்கள் தொடர்ச்சியாக 16 நாள்களாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களுடன் மட்டக்களப்பைச் சேர்ந்த 52 வயதான ஒருவரும் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த நிலையில், திடீர் சுகவீனம் காரணமாக திருச்சி அரச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதை அடுத்து, அவர் உயிரிழந் துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மரணம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை தமிழகத்தின் கே.கே. நகர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து அங்குள்ள இலங்கைத் தமிழர்கள், மாவட்ட ஆட்சியருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.




# மட்டக்களப்பில் கோர விபத்து; இராணுவத்தினர் இருவர் சாவு!

## நால்வர் படுகாயமடைந்தனர்





மட்டக்களப்பில் இடம்பெற்ற விபத்தில் இரண்டு இராணுவத்தினர் உயிரிழந்துள்ளமையுடன் மேலும் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

செங்கலடி கறுத்த பாலத்தில் இராணுவ வாகனம் கடந்த வெள்ளிக்கிழமை வீதியை விட்டு விலகி நீரோடையில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

கரடியனாறில் இருந்து செங்கலடியை நோக்கிப் பயணித்த குறித்த இராணுவ வாகனம், கறுப்பு பாலம் அருகில் கட்டுப்பாட்டை இழந்ததாலேயே விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, இருவர் உயிரிழந்த நிலையில் படுகாயமடைந்த நால்வரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நீரோடையில் வீழ்ந்த ட்ரக் வண்டியை கரைசேர்க்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.










விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம் -
076 443 8622




சேவை

நீங்கள் அடகு வைத்து மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடைவு வைத்த நிறுவனத்துக்கு வருகை தந்து மீட்டெடுத்து அதற்கான பெறுமதிப் பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சிநேகபூர்வமான சேவை.

AAA GOLD CENTRE

076 568 4346

# வாள்வெட்டுக்குழு அட்டகாசம்; மோட்டார் சைக்கிள்கள் சேதம்!

## புத்தூரில் நேற்றிரவு சம்பவம்

யாழ்., புத்தூர் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த வாள்வெட்டு குழு வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களை அடித்து சேதப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

குறித்த சம்பவம் வெள்ளி இரவு 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புத்தூர் பகுதியிலுள்ள வீடு ஒன்றுக்குள் நுழைந்த வாள்வெட்டுக் குழுவினர் அங்கிருந்த 2 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வீட்டு உடமைகள் என்பவற்றைச்சேதப்படுத்திவிட்டுச்சென்றுள்ளனர்.

3 மோட்டார் சைக்கிள்களில் வாள்களுடன் வந்த 6 பேர்கொண்ட குழுவினாலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. எனினும், குறித்த தாக்குதலுக்கான காரணம் எதுவும் வெளியாகவில்லை.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# யாழில் 5 நாள்களில் 10 பேரை சாகடித்த கொரோனா வைரஸ்

## மொத்த மரணம் 75 ஆக அதிகரிப்பு

யாழ். குடாநாட்டில் கடந்த 5 நாள்களில் மட்டும் மேலும் 10 பேர் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக உயிரிழந்துள்ளனர்.

கடந்த ஜூன் 20ஆம் திகதி முதல் ஜூன் 24ஆம் திகதி வரையான 5 நாள்க ளில் இவ்வாறு 10 பேர் கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்துள்ளனர்.

இதையடுத்து இதுவரையான நாள்களில் யாழ். குடாநாட்டில் கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்தவர்களது மொத்த எண்ணிக்கை 75 ஆக உயர்ந்துள்ளது.

யாழ்.குடாநாட்டில் கொரோனா அச்சுறுத்தல் தொடர்ந்துவரும் நிலையில் கடந்த 24 நாள்களில் (ஜூன் 01 - 24) மட்டும் 35 பேர் உயிரிழந்துள்ளதுடன், 1977 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

### கொரோனாச் சட்டத்தை மீறிய

## 43 ஆயிரத்து 855 பேர் இதுவரை சிக்கினர்!

இலங்கையில் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 323 பேர் நேற்றுகைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பொலிஸ் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்தார்.

அதனடிப்படையில் நாட்டில் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் முதல் அமுல்படுத்தப்பட்ட தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறியமைக்காக இதுவரை 43 ஆயிரத்து 855 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார்.

---

## கௌதாரிமுனை கடல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவு எல்லைக்குள் இந்தக் கடலட்டைப் பண்ணை அமைத்துள்ள போதிலும் பூநகரி பிரதேச செயலாளரினதோ அல்லது கிளிநொச்சி மாவட்ட கடல் தொழில் திணைக்களத்தினதோ அனுமதி இதற்குப் பெறப்படவில்லை.

இருந்த போதிலும் யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளரிடம் இருந்து அனுமதி பெறப்பட்டுள்ளது.

இந்த அனுமதி யாழ்ப்பாணத்தவர் மூவரின் பெயரில் வழங்கப்பட்டுள்ள போதிலும் உள்ளூர் வாசிகளுடன் இணைந்து சீன நாட்டவரே அதிகம் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்ட எல்லைப் பரப்பிற்குள் எவ்வாறு யாழ்ப்பாண மாவட்டம் அனுமதி வழங்கியது என வினாவிய போது –

அரியாலைக்கும் கௌதாரிமுனைக்கும் இடைப்பட்ட தூரத்தில் உள்ள சிறு தீவை அண்டிய பகுதி யாழ்ப்பாணம் மாவட்ட நிர்வாகப் பகுதியாகவே இருக்கும் நிலையில், அங்கே தொழில் புரிய வழங்கிய அனுமதியை பயன்படுத்தி ஒரு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கௌதாரிமுனைப் பகுதிக்குள் கடலட்டைப் பண்ணை தற்போது நடத்தப்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

---

## வடமராட்சி கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உள்ளபோதிலும் யாழ்ப்பாணம் இராணுவத் தலைமையகக் கட்டுமானத்திற்காகவும் 50 கியூப் கோரப்பட்டுள்ளது.

இவ்வாறு நீண்ட காலத்தின் பின்பு முதல் தடவையாக அனுமதி வழங்கப்படுகிறது. இப்படியே அனுமதிகள் தொடருமா அல்லது 200 கியூப் அனுமதியை வைத்தே அதிக தொகை அகழப்படுமா என்றும் சந்தேகம் எழுப்பப்படுகின்றது.

---

## 1, 801 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 31 ஆயிரத்து 982 ஆக அதிகரித்துள்ளது.

---

## யாழ்.மாவட்டத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேருக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அவர்களில் யாழ். மாவட்டத்தில் 41 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 02 பேரும், மன்னார் மாவட்டத்தில் 02 பேரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேவேளை, வெள்ளாமுள்ளி வாய்க்கால் தனிமைப்படுத்தல் நிலையத்தைச் சேர்ந்த 09 பேருக்கும், பூந்தோட்டம் தனிமைப்படுத்தல் முகாமைச் சேர்ந்த ஒருவருக்கும், காங்கேசன்துறை கடற்படை முகாமைச் சேர்ந்த ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

---

## எரிபொருள் விலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டில் இருந்திருந்தால் எரிபொருள்களின் விலையை அதிகரிப்பதற்கு இடமளித்திருக்கமாட்டார் எனவும், அவர் நாடு திரும்பியதும் மக்களுக்கு நிச்சயம் நிவாரணம் வழங்கப்படும் எனவும் மொட்டு கட்சி உறுப்பினர்கள் அறிவித்து வந்தனர்.

தற்போது பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பியுள்ளார். எனவே, நிவாரணத் திட்டம் என்னவென்பதை அறிவிக்க வேண்டும் என்று சஜித் அணியின் நாடாளுமன்ற உறுப்பினரான நிரோஷன் பெரேரா வலியுறுத்தினார்.

குறிப்பாக அதிகரிக்கப்பட்டுள்ள எரி பொருள்களின் விலை மீளக் குறைக்கப்படுமானால் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை மீளப்பெறுவதற்கு நாம் தயார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# சங்கிலியால் கைகள் கட்டப்பட்ட நிலையில் ஆணின் சடலம் மீட்பு

சங்கிலியால் கைகள் கட்டப்பட்ட நிலையில் களனி கங்கையில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

நாவகமுவ பகுதியில் சிதைந்த சடலம் மீட்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவரின் கைகள் இரண்டும் இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டு பூட்டுப் போட்டுப் பூட்டப்பட்டுள்ளது. அவரது ஒரு கையில் பச்சை குத்தப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் கடந்த 23 ஆம் திகதி கன்வெல பகுதியில் இருந்து கடத்திச் செல்லப்பட்டவர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்த மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

# ஜூலையில் அமைச்சரவை மறுசீரமைப்பு கைமாறுகின்றன முக்கிய அமைச்சுக்கள்

ஜூலை மாதம் அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெறவுள்ளது என நம்பகரமான அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இதன்படி முக்கிய சில அமைச்சுகள் கைமாறவுள்ளதுடன், விட யதானங்களும் கைமாற்றப்படவுள்ளன என்று அறிய முடிகின்றது.

குறித்த அமைச்சரவை மறுசீரமைப்பின் போதே நிதி மற்றும் பொருளாதார விவகார அமைச்சு பதவி பஸில் ராஜபக்ஷவுக்கு வழங்கப்படவுள்ளது.

விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோரின் அமைச்சு பதவிகள் மாற்றப்படலாம் அல்லது அவர்கள் வகிக்கும் அமைச்சுகளில் கீழுள்ள சில அரச நிறுவனங்கள் ஏனையோருக்கு மாற்றப்படலாம் எனவும் அரசியல் வட்டாரங்களில் கதை அடிபடுகின்றது.

அதேவேளை, அரச நிறுவனங்களின் பிரதானிகள் பதவியிலும் மாற்றம் வரக் கூடும் எனத் தெரியவருகின்றது.




## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.




இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம். தினமும் பத்துக் கேள்விகள் இப்பகுதியில் இடம் பெறும்.அன்றன்று கேள்விக்குரிய உங்கள் பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து தயார் செய்யுங்கள்....
அதனை அடுத்த நாள் காலை 8 மணிக்கு முதல் **Kalaikkathiredu@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.
கேள்வி பிரசுரமாகி இரண்டாவது நாளில் அக் கேள்விக்குரிய விடைகளும், சரியாக விடையளித்த பத்துப் பேரின் விவரங்களும் பிரசுரமாகும்.
தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

**தொகுப்பு:-**
**எஸ். சாரலன்**

## 33ஆவது போட்டிக்குள் நுழைவோமா?

**321. டொமினிக் ஜீவாவின் பிறந்த தினம் எப்போது?**
**322) டொமினிக் ஜீவாவின் முதலாவது கதைத் தொகுதி எது?**
**323) அண்மையில் சீனாவின் தற்காப்பு கலை பாடசாலையில் தீ விபத்து ஏற்பட்டது அப் பாடசாலையின் பெயர் யாது?**
**324) டெஸ்ட் சம்பியன் ஷிப் போட்டியின் சிறப்பாட்டக் காரர் யார்?**
**325) அண்மையில் கொழும்பிலிருந்து சென்ற சரக்கு கப்பலில் தீ ஏற்பட்டது அக் கப்பலின் பெயர் யாது?**
**326)மின்காந்த கொள்கையை கண்டு பிடித்தவர் யார்?**
**327) RAMஇன் விரிவாக்கம் யாது?**
**328) தற்போதைய வடமாகாண ஆளுநர் யார்?**
**329) தந்தையர் தினம் எப்போது?**
**330) இலங்கையில் பறவைகள் சரணாலயம் உள்ள இடம் எது?**

பெயர் :- ..................................................
அடையாள அட்டை:- ..................................
முகவரி :- ..................................................
மின்னஞ்சல் முகவரி:- ...............................
தொலைபேசி இலக்கம்:- ............................

## 31ஆவது போட்டிக்குரிய பதில்கள்

**301. நியூசிலாந்து**
**302. காங்கோ ஜனநாயகக் குடியரசு**
**303.10 $ms^{-1}$**
**304. 1ஆம் உலக மகாயுத்தத்தின்போது அழிவடைந்த நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து**
**305. ஐயம்பிள்ளை நடராசா**
**306. நிக்கலஸ் கொப்பனிக்கஸ்**
**307. ஷீனா**
**308. அஜித் றவாட் கப்ரால்**
**309. Arithemetic Logic Unite**
**310.புதுவருடக் கொத்தணி**

## 25ஆம் திகதி வெளியான 31ஆவது போட்டிக்கு சரியான விடையளித்தோர் விவரம்

**1. ஜெ. வினோஜன் - குடத்தனை (7சரி)**
**2.கே. அனுஷன் - ஏழாலை - (06 சரி)**
**3. யு.யாமளை - கொழும்பு - (06 சரி)**
**4.ரிஸ்மியா ஹமீட் -தெல்தோட்டை - (06 சரி)**
**5. பி. சயந்தன் - அரியாலை (06 சரி)**

# கிழக்கில் 14 ஆயிரத்தை நெருங்கும் தொற்றாளர்!

## கொரோனாக் காவு 225 பேர்

**(வி.ரி.சகாதேவராஜா)**

கிழக்கு மாகாணத்துக்கென வழங்கப்பட்ட 75 ஆயிரம் சினோபோர்ம் தடுப்பூசிகளில் 72 ஆயிரத்து 176 ஊசிகள் கடந்த வெள்ளிக்கிழமை வரை ஏற்றப்பட்டுள்ளதென்கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்கள பணிப்பாளர் வைத்தியர் ஏ.ஆர்.எம். தௌபீக் தெரிவித்தார்.

மட்டு.மாவட்டத்தில் 23 ஆயிரத்து 306 பேருக்கும் அம்பாறை பிராந்தியத்தில் 24 ஆயிரத்து 105 பேருக்கும் திருமலை மாவட்டத்தில் 24 ஆயிரத்து 155 பேருக்கும் செலுத்தப்பட்டுள்ளன.

கல்முனைப் பிராந்தியத்துக்கு இன்னும் தடுப்பூசி செலுத்தும் பணி ஆரம்பிக்கப்படவில்லை. அதற்கான முன்னாயத்த வேலைகள் சகல சுகாதாரப் பிரிவுகளிலும் எடுக்கப்பட்டுவருகின்றன.

கிழக்கு மாகாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை வரை கொரோனாவுக்கு 255 பேர் பலியாகியுள்ளனர். இவர்களில் 229பேர் மூன்றாவது அலையில் மரணித்தவர்களாவர். திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை 125 பேர் மரணித்துள்ளனர்.

கிழக்கில் இதுவரை மரணித்த 255 பேரில் திருகோணமலை மாவட்டத்தில் அதிகூடிய 125 பேரும் அம்பாறைப் பிராந்தியத்தில் 26 பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 69 பேரும் கல்முனைப் பிராந்தியத்தில் 35 பேரும் மரணித்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் தொற்றுக்களின் எண்ணிக்கை 14ஆயிரத்தை அண்மித்துள்ளது.இதுவரை 13 ஆயிரத்து 935 பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. இவர்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 5ஆயிரத்து 398 பேரும் திருகோணமலையில் 4 ஆயிரத்து 290 பேரும் அம்பாறைப் பிராந்தியத்தில் 1,860 பேரும் கல்முனைப் பிராந்தியத்தில் 2 ஆயிரத்து 387 பேரும் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

# ரஞ்சனுக்கு திடீர் உடல் நலக் குறைவு கராப்பிட்டி வைத்தியசாலையில் சேர்ப்பு

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க திடீர் உடல்நலக்குறைவு காரணமாக காலி - கராப்பிட்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சனுக்கு நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்ததாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்திருந்தது.

மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்தா சில்வா கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டார்.

இருப்பினும், நீதி அமைச்சக வட்டாரங்களின் படி, ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்குவது இன்னும் அரசாங்கத்தால் செயற்படுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.



இது தொடர்பாக அரசாங்கத்துக்கும், ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையே பல பேச்சுகள் நடந்த போதிலும், கோரிக்கையின் பேரில் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# அறுகம் குடா மீன்பிடித் துறைமுகத்திலிருந்து தொழிலுக்குச் சென்ற இரு மீனவர்கள் மாயம்

அம்பாறை - பொத்துவில், அறுகம் குடா மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடற்றொழிலுக்குச் சென்ற இரண்டு மீனவர்கள் காணாமல் போயுள்ளனர்.


அறுகம் குடா மீன்பிடித் துறைமுகத்திலிருந்து இயந்திரப் படகில் கடலுக்கு சென்ற இண்டு மீனவர்களே கடந்த 23 ஆம் திகதி முதல் இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

பொத்துவில் - களப்புக்கட்டு பகுதியை சேர்ந்த 52 வயதான ஒருவரும் பசறிச்சேனையை சேர்ந்த 32 வயதான ஒருவருமே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

இந்தநிலையில் காணாமல் போயுள்ள மீனவர்களைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# Challenges make us strong





A challenge is referred as a fight to prove our self in the society. A challenge helps us to strengthen our selves, it also helps us to adopt to any environment, it motivates us to achieve the life goals. Challenges improve the skills and capacity of an individual and also an individual can be unique in the society be overcoming challenge.


For example Bill Gates, the founder of Microsoft is the billionaire and the richest person in the world by overcoming the challenge of finding software for the computer, still known as Microsoft. He had overcome through this challenge by a continuous day and night work for seven days.

Thomas Alva Edison, the inventor of electricity was thrown away from his school as a weaker student in studies. However he has proven himself by inventing electricity which is the major reason for this modern world. So each and every individual should be ready to face challenge in order to succeed in life.

So, my dear friends challenges are there in our day to day life. Life is a challenge which will help us to successes.



**Nilaxshana Srivarathan,**
**Grade 11**
**J/Vembadi Girls' High School**



# A speech on "Advantages and disadvantages of talking with others"

Good morning dear principal, teachers and my dear students. It is a pleasure to speak infront of you all on "advantages and disadvantages of talking". Talking is the best way to solve our problems.

Talking with others will improve our knowledge through the different opinions and views from others. Talking with others will also help us to relax and improve the quality of decisions.

Talking with others helps for better decisions through discussions. we can get different ideas in a creative manner in order to make better decisions. As every individuals have different views in solving a problem we can make cognitive decisions.

Through discussions we get different options including futuristic and technological changes. As a result the decisions through discussion are far more better than individual decisions.

Even though talking is a best option in decision making but it has limitations too. One such limitation is delay in decision making. So as we all are students we must talk with our teachers and elders for making better decisions.

Thank you!

**Mathumitha Iayakaran**
**Grade 10**
**J/kokuvil hindu college**

# INTERNET

**Advantages of internet**

Internet is the invention that changed the world. Through internet the global world changed to global village. Internet enables distance learning, through this anyone from any part of the world can continue their education from the leading universities.
Electronic banking is another revolution by internet. Through this all the banking transactions become easier in our finger tips. Electronic-markets such as Amazon.com, E-Bay. Com, Alibaba. Com have made our lives easier.
Through internet we can organize virtual meetings. Virtual meeting saves our time and cost. However, internet has its limitations too.

**Disadvantages of internet**

Misleading information, irrelevant contents are also the risks associated with internet. In addition to these hacking of information and threat to privacy are also the banes of internet.



**Possible solution**

Whatever, the limitations associated we cannot neglect the benefits from internet. So, with the proper awareness and with the usage of reliable websites we can protect ourselves from the drawbacks of internet.

**Ponrasan Abinaya**
**Grade 11**
**Jaffna Vembadi Girls High School**




Imagine that your school has organized an Agricultural exhibitionWrite a notice informing all students and teachers.

Include the: Event, Date and Time, purpose of the exhibition, Who can participate, Things the participants have to bring, Further details.

## NOTICE

"An Exhibition"

An Agricultural exhibition has organized by our school. This is on 25th of June 2021 from 8.00a.m to 1.30p.m in the school main hall. All students and teachers can participate. The purpose of the exhibition is to learn about knowing how to increase plants growth. The participants have to bring a note book and entry tickets. Get your entry tickets before 10th of June through your section leader.

5th June 2021

P.Thamilkani
Student leader

**P.Thamilakni.**
**Grade 09**
**J/Kokuvil Hindu college**

காலைக்கதிர் Kalaikkathir


# DESCRIBING VENN DIAGRAM

The following Venn diagram shows the information about what your classmates use the internet for. Write a description based on the information given. Use about 150 words.

These words may help you:

………………………………

Majority, Minority, Both….and, Not only...but also, only




The above Venn diagram given here shows what my classmates use the internet for. According to the diagram, my friends use the internet for three common things, they are, online studies, online ordering and communication also. Overall, forty-one students are reported for this diagram.

Five classmates use the internet for only online studies while eight students use the internet for online ordering. On the other hand, only seven students use the social media to communicate. Three students want the internet for both online ordering and online studies. Two classmates need the internet for not only online ordering but also communication. My nine friends use the internet for either communication or online studies.

Moreover, Venn diagrams help to visually represent the similarities and differences between three purpose of internet among my classmates. In conclusion majority of students use the internet for communication, which is twenty-four whereas minority of students use the internet for online ordering, which is twenty.

**Subeedshana Jeyakanth,**
**2023 A/L BIO,**
**KN/Pallai Central College.**

# Write a note to your friend about the optional subjects you have selected



**Include the following:**
- The subjects you have selected
- Why you have selected them
- Inquire about his/her selection

20th of June 2021

**Dear Friend,**
I have selected the optional subjects such as Tamil literature, Commerce and ICT. I have selected them as because they have a great potential in the future. May I know about your selections? Waiting for your reply.

**Akalini Mahendran.**
**Grade-09**
**J/Vembadi Girls' High School**

# Construct Passive Sentences in Simple Future tense

The format of constructing sentences in passive is object will be + 2 past participle +by+ subject

**Eg. I will play badminton Cactive voice)**

Subject :- I
verb :-play
Object :- badminton

Badminton will be played by me. Cpassive voice)
Step 1 :- Write the object
Step 2 :- We should add 'will be
Step 3:- Write the Vs Cpast participle of verb.
Step 4:- Write by and subject

**Let's practise**
1. The manager will arrange a meeting
2. She will invite her friends to her birthday
3. The policeman will arrest the criminal.
4. Dr. Jones will cure my father.
5. I will cut the grass
6. The manager will promote him.
7. They will paint our gate. She will return the money.
9. They will discuss this matter.
10. I will buy some things at the new shop

1. A meeting will be arranged by the manager.
2. Her friends will be invited by her to her birthday party.
3. The criminal will be arrested by the policeman.
4. My father will be curred by Dr. Jones.
5. Grass will be cut by me.
6. He will be promoted by the manager.
7. Our gate will be painted by them.
8. The money will be retured by her.
9. This matter will be discussed by them.
10.Some things will be bought by me at the new shop.


Vinuja Sivananthan
2023 A/L Bio
Kn/ Palai Central College

Learning English by reading newspapers is a good habit. Newspapers are reliable source to expand your English vocabulary. It can also improve your spoken English as you read aloud the articles. We are publishing articles every Sunday to accelerate the English Language skills of school children in this outbreak.
**Articles are welcomed from school children and they can be emailed to kalaikkathiredu@gmail.com**

காலைக்கதிர் Kalaikkathir







# Average Speed

**How to calculate average speed?**
Average speed is the total distance travelled divided by the total time taken. So the equation would be:

**Average speed =**
**Distance moved/Time taken**

# Time


**Example Calculation**
Average speed =
Distance moved/ Time taken


= 100m / 20s
= 5m/s

# Distance

**Units**
Usually people measure distance in meters, time in seconds and therefore speed in m/s. Other units for speed include km/h, cm/s and mph.

# Rearranging the Speed Equation






Sometimes, you will be given information about the time taken and the speed and asked to nd the distance or given the distance and the speed and asked to nd the time. To do this, you must be able to rearrange the speed equation.

Use the triangle above, if you are asked to nd distance cover the s (distance) with your nger and do what the remaining says for example cover distance with your nger and multiply speed by time to get the distance!!!!

## DISTANCE TIME GRAPHS

**DISTANCE TIME GRAPH**
A distance-time graphs shows the distance travelled by an object with respect to time.

**GRADIENT**
The slope or gradient of the line tells the speed of the car, so the steeper the line, the faster the object.

**CONSTANT SPEED**
If the graph is moving in a straight line, then the object is moving at a constant speed. (Check the video for a visual representation).

**STATIONARY**
If the line in the graph is horizontal, then the object is not moving.
It is stationary.
(Check the video for a visual representation).

**ACCELERATION**
When the line on the graph gets steeper, that is the gradient increases, the object is accelerating.
(Check the video for a visual representation).

**DECELERATION**
When the line on the graph gets less steep, that is the gradient decreases, the object is decelerating.
(Check the video for a visual representation).

# CHANGING SPEED

For objects to go faster or slower, they must change speed. For example, a plane must go faster (accelerate) to take-off and a car must go slower (decelerate) to brake.

## ACCELERATION

Acceleration is the rate at which objects speed up. We can calculate it using the following equation.
Acceleration =
(final velocity - initial velocity) / time taken

## UNITS

Velocity, like speed, is measured in m/s. Acceleration is the rate of increasing velocity so is measured in meters per second per second, m/s/s or $m/s^2$.

## DECELERATION

Deceleration is slowing down. So the final velocity is less than the initial velocity. You use the same equation as acceleration so that the answer is negative. A negative acceleration is deceleration.

## VELOCITY TIME GRAPHS

**VELOCITY TIME GRAPH**
A velocity-time graph shows the change in the velocity of an object with respect to the time.

**GRADIENT**
The slope of the line all depends on the acceleration of the object. You can nd the gradient of a velocity time graph by dividing the increase of velocity by the time taken for that increase..

**LOW ACCELERATION**
If the graph is moving in a shallow gradient, then the object is moving at a low acceleration. (Check the video for a visual representation).

**HIGH ACCELERATION**
If the line in the graph is moving in a steep gradient, then the object is at a high acceleration. (Check the video for a visual representation).

**NO ACCELERATION**
When the line on the graph is horizontal, the object is not accelerating. (Check the video for a visual representation).

**DECELERATION**
When the line on the graph has a negative gradient, the object is decelerating. (Check the video for a visual representation).

Learning English by reading newspapers is a good habit. Newspapers are reliable source to expand your English vocabulary. It can also improve your spoken English as you read aloud the articles. We are publishing articles every Sunday to accelerate the English Language skills of school children in this outbreak.
**Articles are welcomed from school children and they can be emailed to kalaikkathiredu@gmail.com**

Preyan Anuraj
Grade 10
Gateway College
www.precoolskillz.com

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 48

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்



- செல்லத்துரை ரவீந்திரன் -

**147. குமார் பொன்னம்பலத்தை விடுதலைப் புலிகளின் ஓர் அரசியல் தலைவராகவோ அல்லது சர்வதேச பேச்சாளராகவோ ஆக்கும் எண்ணங்கள் எழுந்தனவா?**

விடுதலைப் புலிகளுக்கு குமார் பொன்னம்பலம் போன்ற ஒருவர் நன்கொடையே. அவரது பேச்சிலும் ஆளுமையிலும் வலு இருந்ததால் அரசியல் தலைமையை அல்லது அவர்கள் ஆக்க நினைத்த கட்சியின் தலைமையை கொடுக்கலாம் என்று அபிப்பிராயப்பட்டார்கள். அதே சமயம் சர்வதேச பொறுப்பாளர் பதவியை அவர் வகிப்பது ஐரோப்பாவிலும் மற்ற சர்வதேசத்திலும் விடுதலைப் புலிகளின் நிலைக்கு உதவிசெய்யும் என்று நினைத்தார்கள். உள் கட்டுப்பாடுகளில், சர்வதேசப் பொறுப்பாளராக லோரன்ஸ் திலகர் இருந்தார். அவருடைய வட்டம் ஒன்று இருந்தது. அதை மீறாமல் சர்வதேசப் பேச்சாளராக அவரை யோசித்தனர். ஆனால் இரண்டிலுமே பல நடைமுறைச் சிக்கல்கள் இருந்தன.

**148. அப்படியானால் அவரை அன்ரன் பால சிங்கம் போல் ஆலோசகராக வைக்கும் திட்டம் இருந்ததா?**

முன்னர் சொல்லிய மாதிரி இதற்கும் நடைமுறைச் சிக்கல்கள் இருந்தன. அவற்றிலும் பார்க்க, இதில் ஒரு விடுதலைப் போராட்டத்தின் அரசியல் பார்வைகளில் இரண்டு பேருக்கும் பாரிய வித்தியாசங்கள் இருந்தன. பாலசிங்கம் இடதுசாரி சிந்தனைகளில் மார்க்ஸிய தத்துவங்களில் நம்பிக்கை கொண்டவர். அவற்றை அவர்களோடு இணைந்த நாள்தொட்டே வகுப்புக்கள் எடுத்துப் புகுத்தப் பாடுபட்டவர். அவரது சர்வதேச அரசியல் அணுகுமுறைகளின் அனுபவங்கள் வேறு அவை குமார் பொன்னம்பலத்துக்கு இருக்கவில்லை. அவரிடம் இடதுசாரிச் சிந்தனை இல்லை. பாலசிங்கம் மென்மையான முறையில், ஆழமாக கருத்து சொல்பவர். ஆனால் குமாரது கருத்துக்கள் ஆரவாரமாக, பலமாக நீதி கேட்டு நிற்குமேயொழிய அணுகுமுறைகளில் அனுபவம் குறைந்திருந்தது. பாலசிங்கத்தின் மேல் பிரபாகரனுக்குப் பெருமதிப்பு இருந்தது. விடுதலைப் புலிகளின் அங்கத்தினரும் அவர் மேல் அண்ணா என்று பாசம் வைத்திருந்தனர். ஆயின் தொடரும் போராட்டங்களும் கொலைகளும் ஓர் களைப்பையும் விரக்தியையும் கொடுக்கும், நெடுக இராணுவப் பலத்தைக் கட்டியெழுப்பவும் அதன் வெற்றிகளிலும் தங்கியிராமல் அரசியல் யாதார்த்தத்துக்கு வரவேண்டும் என்று அறிவுரை தந்து கொண்டிருந்தார். பிரபாகரன், பாலசிங்கத்தின் மார்க்ஸிய பாடங்களுக்கோ அன்றில் அரசியல் வகுப்புக்களுக்கோ தொடக்கத்திலிருந்து போனவரல்லர். அவர் ஆயுத வெற்றியிலேயே நம்பிக்கை



வைத்திருந்தார். ஆகவே குமார் பொன்னம்பலத்தை ஆலோசகராக அமர்த்துவது இயக்கத்துக்கிடையே கருத்து வேற்றுமைகளை தோற்றுவிக்கும் என அது முன்னெடுக்கப்படவில்லை.

**149. என்ன யதார்த்த நிலைகளால் அரசியல் தலைமையோ சர்வதேசப் பேச்சாளர் பதவியோ தரப்படவில்லை?**



அரசியல் தலைமையை ஏற்கும் பட்சத்தில் அவர் பிரபாகரனின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் அல்லது ஆளுமைக்குள் வரவேண்டும். அவர்களின் கட்டமைப்பில் அது தான் யதார்த்தம். குமார் பொன்னம்பலம் அப்படியான கட்டுப்பாட்டுக்குள் வர விரும்பியிருக்க மாட்டார். அவரது இயல்பில் அது சாத்தியமானதும் அல்ல. பிரபாகரன் தனது 17 வயதிலேயே பந்தம்,பாசம் அந்த வயதில் ஒரு சாதாரண இளைஞருக்கு இருந்த ஆசாபாசம் இவையெல்லாவற்றையும் தூக்கி எறிந்து விட்டு, பசி, பட்டினியோடு மறைவிடங்களிலும் காடுகளிலும் வாழ்ந்தவர். விடுதலைக் காகத் தனிமனிதப் படுகொலைகளிலிருந்தே அனைத்தும் அவருக்கு ஆரம்பமாகியிருந்தன. அவை நியாயப்படுத்தப்பட்டன. மக்களோடு அவர்கள் பொதுத் தொடர்புகள் வைத்துக் கொள்ளவில்லை. ஏனெனில் அவர்கள் சட்டத்தின் கீழ் தேடப்படுவார்கள்.

மனித உரிமைப் பேச்சாளரான குமாருக்கு அவர்களுடன் இணைந்து அவர்களின் அங்கத்தினராக அவற்றை ஏற்றுச் செயற்படமுடியாதிருந்தது. மற்றும் அவர் காலம் காலமாகக் கொழும்பிலே மக்களிடையே பிரசித்தமாக வாழ்ந்தவர். பரம்பரையாக சிறிலங்காவில் அவரது சொத்துக்கள் இருந்தன. அவரது மனைவியும், பிள்ளைகளும் கொழும்பிலேயே வாழ்ந்தவர்கள். அவையெல்லாவற்றையும் துறந்து, அவரால் பிரபாகரன் போல ஒரு விடுதலைப் போராளியின் வாழ்க்கைக்கு மாறுவது கஷ்டமானது. திரும்ப அவர் வாழ்ந்த வாழ்விலும்,இயல்பிலும் உபத்திரங்கள் தரக்கூடியன. அதுவும் யதார்த்தம். ஆகவே பதவிகள் என்று பட்டயங்கள் போடப்படாவிட்டாலும், அவர் சர்வதேச நிலையில் பொறுப்பாளருக்கு மேலாகவும், பேச்சாளருக்கு மேலாகவும், உயர்ந்த நிலைமையில் ஆளுமை செய்கிறார் என்று பாரிஸ் வட்டாரங்களுக்கு உணர்த்தப்பட்டது. அவர்கள் அதை உணர்ந்தே நடந்தார்கள்.

**150. அப்படியான ஒரு தரத்தில் வைத்து நடத்தப்படுவதற்கு குமார் பொன்னம்பலம் விடுதலையின் ஆயுதப் போராட்டத்தை ஆமோதித்து வலுப்படுத்தினாரா?**


அவர் ஒருவரே தமிழ்த் தலைவர்களிடையே விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தை வெளிப்படையாகவும் பயமின்றியும் சிங்கள மக்களிடையே வாழ்ந்து கொண்டும் நியாயப் படுத்தியவர் என்று பிரபாகரனே தெரிவித்தார். அவர் கொல்லப்பட்டு 9 ஜனவரி 2000 கொழும்பில் ஈமக்கிரியைகள் நடந்தன. அதன் பிறகு அவர் மாமனிதனாக கௌரவிக்கப்பட்டார். அந்தத் தினம் கொழும்பில் தமிழர் செறிந்து வாழ்ந்த வெள்ளவத்தை, பம்பலபிட்டிய, கொள்ளுப்பிட்டிய போன்ற பகுதிகளில் கூடக் கறுப்புக் கொடிகள் பறந்தன. தமிழ்ப் பிரதேசங்கள் எல்லாம் ரெலோ, ஈரோஸ் அமைப்புக்களின் ஒத்துழைப்போடு கடையடைப்பு நடத்தி மரியாதை செய்தார்கள். அவர் இந்து மத பாரம்பரியங்களிலும் அதன் வழிபாடுகளிலும் ஆழ்ந்த பற்றுக் கொண்டு அவற்றை மனசுத்தியோடு கடைப்பிடித்தவர். அதுமாத்திரமல்லர், இந்து மத தத்துவங்களை ஆழமாகப் படித்தவர். இந்தியாவில் உள்ள பிரபலமான கோவில்களுக்கெல்லாம் வலம் வந்தவர். அநேகமான சமூக ஈடாட்டங்களிலெல்லாம் கூட நெற்றியில் திருநீறு இருக்கும். அப்படியானவர், அளவில்லாத வன்முறையை நியாயப்படுத்தியதில் பல தமிழ் மக்களுக்கே அதிருப்தி இருந்தது. ஆனால் அவர் ஓர் உள்ளசுத்தியோடு, ஆழ்ந்த உணர்வுகளின் ஆதங்கங்களில், ஏதுமே அறியாத இளம் கிருஷாந்தி குமாரசாமியின் வழக்கு மூலம் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அவலங்களை எடுத்து சர்வதேசத்திற்கு முன்வைத்த போது, எல்லாத் தமிழர் மத்தியிலும் எதுவித பேதங்களுமின்றி உயர்ந்து நின்றார். அப்படி ஓர் அசாதாரண தமிழன் எனப் பெருமை கொண்டார்கள்.

(வளரும்.......)




# மூவின இலக்கியவாதிகளினாலும் நேசிக்கப்பட்டவருக்கு இலங்கை அரசு நினைவு முத்திரை வெளியிட வேண்டும்

**இன்று ஜூன் 27 மல்லிகை ஜீவா பிறந்த தினம்**



முருகபூபதி

யாழ்ப்பாணத்தில் சாதாரண மத்தியதரக் குடும்பத்தில் பிறந்து, உயர்கல்வியைப் பெறுவதற்குரிய வாய்ப்பு வசதிகளை இழந்து, அறிஞர்களினதும் முற்போக்கு எழுத்தாளர்களினதும் நூல்களை வாசித்துப்பெற்ற அனுபவங்களினாலேயே மேதையாக வலம்வந்து, ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு கடுமையாக உழைத்திருக்கும் மல்லிகை ஜீவா, கடந்த ஜனவரி மாதம் 28 ஆம் திகதி கொழும்பில் மறைந்தார்.

அவரையும் சமகால கொரோனாத் தொற்று விட்டுவைக்கவில்லை என அறியப்படுகிறது.

ஈழத்து மற்றும் தமிழகம் உட்பட உலக நாடுகள் எங்கும் யாராவது இலக்கிய ஆளுமை மறைந்தால், அவர்களுக்காக அஞ்சலிக் குறிப்பினைத் தமது மல்லிகையில் பதிவேற்றி வந்தவர் ஜீவா. இலங்கையில் கலை, இலக்கியம் சார்ந்த எவரும் மறைந்து விட்டால், முடிந்தவரையில் பயணம் மேற்கொண்டு இறுதி நிகழ்வில் அஞ்சலி செலுத்துவதையும் தனது வாழ்வில் மரபாகவே கொண்டிருந்தவர்.

இவ்வாறு ஏனையோர் துயரத்தில் பங்கேற்ற மல்லிகை ஜீவாவின் இறுதிநிகழ்வு, அவரது ஏக புதல்வன் திலீபன் முன்னிலையில் மாத்திரம் நிகழ்ந்தது வியப்புக்கலந்த அதிர்ச்சியை அளித்தது.

மகாகவி பாரதியின் இறுதி நிகழ்வில் விரல்விட்டு எண்ணத்தக்கவரே கலந்துகொண்டதாக இன்றும் பேசப்படுகிறது, எழுதப்படுகிறது.

ஆனால், எங்கள் மல்லிகை ஜீவாவுக்கு அந்தப் பெருமையும் ஒரு நபருடன், அதுவும் அவரது ஏக புதல்வனுடன் குறுகிவிட்டது விதிப்பயனா..? என்று எண்ணத் தோன்றுகிறது.

யாழ்ப்பாணத்தில் ஜோசப் - மரியம்மா தம்பதியருக்கு 1927 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27 ஆம் திகதி பிறந்திருக்கும் டொமினிக் ஜீவா, மல்லிகை கலை, இலக்கிய மாத இதழை 1966 ஆம் ஆண்டு.

முதல், 2012 ஆம் ஆண்டுவரையில் வெளியிட்டார். இதுவரையில் நானூறுக்கும் மேற்பட்ட இதழ்கள் வெளியாகியிருக்கின்றன.

இவ்விதழ்களை நூலகம் ஆவணகத்தில் பார்க்க முடியும்.

டொமினிக் என்பது அவரது இயற்பெயர். தமிழகத்திலிருந்து பொதுவுடமை இயக்கத்தோழர் ஜீவானந்தம் பிரித்தானியர் காலத்தில் தலைமறைவாக இலங்கை வந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த காலப்பகுதியில் அவரது கருத்துக்களினால் கவரப்பட்ட டொமினிக், தனது பெயருடன் ஜீவா என்ற எழுத்துக்களையும் இணைத்துக்கொண்டார்.

மல்லிகை ஆசிரியராகவும் பதிப்பாளராகவும் பயணித்து சுயமுயற்சியோடு அதனை வெளியிடத்தொடங்கியதும், மல்லிகை ஜீவா என பரவலாக அறியப்பட்டார்.

அவரது இந்த நாமம் இலங்கையெங்கும் மட்டுமல்ல தமிழகத்திலும் புகலிடத்திலும் இலக்கியவாதிகள் மத்தியிலும் பரவியிருந்தது.

இன்னும் சில வருடங்கள் வாழ்ந்திருப்பின் நூறு வயதையும் எட்டியிருப்பார்.

ஜீவா முதலில் சிறுகதை எழுத்தாளராகவே இலக்கிய உலகில் பிரவேசித்தவர். அவரது முதலாவது கதைத் தொகுதி தண்ணீரும் கண்ணீரும்.

அதற்கு இலங்கையின் தேசிய சாகித்திய விருது கிடைத்தது. அதுவே இலங்கையில் தமிழில் தேசிய மட்டத்தில் இலக்கியத்திற்காக அவ்வாறு கிடைத்த முதல் விருதுமாகும்!

விருதை வாங்கிக்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு ரயிலில் திரும்பிவருகிறார். ஊர்மக்கள் அச்சமயம் யாழ்ப்பாண மேயராக பதவியிலிருந்த துரைராஜாவின் தலைமையில் மாலை அணிவித்து அவரை வரவேற்றனர்.

கம்யூனிஸ்ட் கட்சியிலும் அங்கத்துவம் பெற்றிருந்தார். அடிநிலை மக்களுக்காக நடத்தப்பட்ட பல போராட்டங்களிலும் கலந்துகொண்டார். ஒரு மேதின ஊர்வலத்தில் குறுக்கிட்ட சிலர் அவரைத் தாக்கியதால் அவரது மண்டையில் கடுங்காயம் வந்து, யாழ். ஆஸ்பத்திரிக்குச்சென்று அதற்கு இழைபோட்டுவிட்டு மீண்டும் வந்து மேதின மேடையில் முழங்கிய கர்மவீரன் அவர்.

எப்பொழுதும் தர்மாவேசத்துடன் மேடைகளில் பேசும் அவர் இயல்பிலேயே குழந்தை உள்ளம் கொண்டவர்.

நேற்று சனிக்கிழமை ( 26 ஆம் திகதி ) யாழ். காலைக்கதிரிலும் கம்பவாரிதி ஜெயராஜ், மல்லிகை ஜீவாவின் பண்புகளை இலக்கிய ஆளுமையை விதந்து குறிப்பிட்டுள்ளார்.

தண்ணீரும் கண்ணீரும் கதைத்தொகுப்பைத் தொடர்ந்தும் சிறுகதைகள் எழுதிய ஜீவா, பின்னர் பாதுகை, சாலையின் திருப்பம், வாழ்வின் தரிசனம் முதலான தொகுதிகளையும் மேலும் சில நூல்களையும் இலக்கிய உலகிற்கு வரவாக்கியவர்.

சாலையின் திருப்பம் தொகுதிக்கு அவரது நீண்டகால நண்பர் ஜெயகாந்தன் முன்னுரை எழுதியிருக்கிறார். தமிழகத்தின் சரஸ்வதி (1958), தாமரை (1968) முதலான இதழ்களும் ஜீவாவின் உருவப்படத்தை அட்டையில் பிரசுரித்து அவரைப்பற்றி எழுதி கௌரவித்திருக்கின்றன. குமுதம் இலவச இணைப்பாக ஜீவாவின் அனுபவமுத்திரைகள் கட்டுரைகளை மறுபிரசுரம் செய்து விநியோகித்திருக்கிறது.

ஒரு சிறுகதை எழுத்தாளன், பெரிய பொருளாதார வசதிகளோ, உயர்ந்த கல்விப் பின்புலமோ இல்லாமல் தொடர்ச்சியாக 45 ஆண்டுகளுக்கும் மேலாக மல்லிகை இலக்கிய இதழை நடத்தியிருக்கிறார் என்ற சாதனையும் இன்று காலம் கடந்த செய்திதான்.

இலங்கை நாடாளுமன்றத்தில் விதந்து பேசப்பட்ட இலக்கியவாதியான டொமினிக் ஜீவாவுக்கு அந்தப் பெருமையை பெற்றுக்கொடுத்ததும் அவரது அயராத முயற்சியினால் வெளியாகிக் கொண்டிருந்த மல்லிகைதான்.

யாழ். குடாநாட்டுக்குள்ளிருந்து முதலிலும் போர் நெருக்கடி தொடங்கிய 1990 இற்குப் பின்னர் கொழும்பிலிருந்தும் வெளியான அவரது மல்லிகை இதழில் இலங்கையின் அனைத்துப் பிரதேச எழுத்தாளர்கள் மட்டுமன்றி, தமிழகத்திலிருந்தும் புகலிட நாடுகளிலுமிருந்தும் பலர் எழுதினார்கள்.

மாதாந்தம் மல்லிகையை வெளியிட்டவாறே ‘மல்லிகைப்பந்தல்’ பதிப்பகத்தின் மூலம் பல படைப்பாளிகளின் படைப்புகளையும் நூலுருவாக்கி விநியோகித்தார். அத்துடன் சில பிரதேச சிறப்பிதழ்களையும் வெளிக்கொணர்ந்து மண்வாசனை இலக்கியத்திற்கும் வளம்சேர்ப்பித்தார்.

ஜீவா மறைந்த செய்தி அறிந்ததும் இலங்கையில் வாழும் மூவின எழுத்தாளர்கள் - வாசகர்களினால் அவர் சமகால கொரோனா நெருக்கடிக்கு மத்தியிலும் இணையவழி காணொலி ஊடாக நினைவுகூரப்பட்டார்.

தமிழகத்திலும் புகலிட நாடுகளிலும் அவர் மறைந்த நாள் முதல் தொடர்ச்சியாக ஊடகங்களிலும் பேசப்பட்டார்.

இலங்கையில் தமிழ் ஏடுகள் மற்றும் ஆங்கில சிங்கள இதழ்களிலும் ஜீவா பேசுபொருளாகத் திகழ்ந்தார்.

தேசிய இன நெருக்கடிக்கு மத்தியில் இனநல்லிணக்கத்திற்காகவே தொடர்ந்து குரல் எழுப்பி வந்துள்ளவர் மல்லிகை ஜீவா.

இத்தகைய ஓர் உன்னத புருஷருக்கு இலங்கை அரசு நினைவு முத்திரை வெளியிடவேண்டும் என்று அவர் மறைந்த நாள் முதல் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம்.

அதற்கு அவர் முற்றிலும் தகுதியானவர்.

இலங்கை அரசின் சாகித்திய விருது உட்பட சாகித்திய ரத்னா, மற்றும் தேசத்தின் கண் முதலான உயரிய விருதுகளையும் பெற்றவர் அவர். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவருக்கு தேசத்தின் கண் விருதினை வழங்கியபோது அந்த விருதைப்பெற்ற மற்றும் ஒருவர் பிரபல விஞ்ஞான எழுத்தாளர் ஆதர் சி.கிளார்க்.

இலங்கையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சுவாமி விபுலாநந்தர், சுவாமி ஞானப்பிரகாசர், கலாயோகி ஆனந்த குமாரசாமி , பேராசிரியர் சு. வித்தியானந்தன், சட்டப்பேரவை அங்கத்தவர் முத்துக்குமாரசாமி ஆகியோருக்கும் சிங்கள மத்தியில் பிரபல்யமாக விளங்கிய அநாகரிக தர்மபாலா, எழுத்தாளர் மார்டின் விக்கிரமசிங்கா, சிங்களத்திரைப்பட இயக்குநர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், அறிஞர் அஸீஸ், வழக்கறிஞர் அப்துல் காதர் உட்பட சமூகத்திற்குத் தங்களது வாழ்வை அர்ப்பணித்த பலருக்கு இலங்கை அரசு நினைவு முத்திரை வெளியிட்டு நினைவுகூர்ந்து கௌரவித்துள்ளது.

அந்தவகையில் இலங்கையில் மூவின இலக்கியவாதிகளினாலும் ஊடகவியலாளர்கள், கலைஞர்களினாலும் தொடர்ந்து நினைவுகூரப்படும் மல்லிகை ஜீவா அவர்களுக்கும் இலங்கை அரசு நினைவு முத்திரை வெளியிடவேண்டும் என்று வலியுறுத்திவருகின்றோம்.

ஜீவா மறைந்ததும் இடம்பெற்ற இணைய வழி காணொலி அரங்குகளில் உரையாற்றிய முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மல்லியப்பு திலகர் மற்றும் பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், இதழாசிரியர்கள், ஊடகவியலாளர்கள் அனைவரும் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டனர்.

இலங்கையிலிருக்கும் அவர்கள் முயற்சித்தால் மல்லிகை ஜீவாவுக்கு நினைவு முத்திரை வெளியிடுவது சாத்தியமாகும்.

இது தொடர்பாக தபால் அமைச்சுடனும் தபால் திணைக்களத்துடனும் தொடர்புகொண்டு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று மல்லிகை ஜீவாவின் இன்றைய 94ஆவது பிறந்த தினத்தின்போது கோருகின்றோம்.



# சுய முன்னேற்றம்

மற்றவரை நம்பி தொழில் துவங்கும் யாரும் முன்னேற மாட்டார்கள்.

தாயும் பிள்ளையும் ஒன்றானாலும் வாயும் வயிறும் வேறு. உறவுகள் பால மாவதும் பாரமாவதும் நம் நடத்தை யைப் பொறுத்ததுதான்.

இல்லாள் இல்லையெனில் இல்லறம் இல்லை. பெற்ற மக்களே ஆனாலும் நம் எல்லைகளில் வாழ்வதே அமை தியை தரும்.

பொருள்கள் மீதும் இதர சுகங்கள் மீதும் மோகம் கொள்வது சுய ஆற்ற லையே அறியச்செய்ய முடியாமல் போகலாம்.

# எப்போதும் நம்முடன் இருக்கும் சிறந்த வழி



நாம் மேலும் சென்று வாழ்க்கை நமக்கு அளிக்கும் பாதைகளில் ஒன்றில் இறங்கினால், முடிவுகளை எடுத்து முடிவுகளை மதிப்பீடு செய்வது அவசியம். சில நேரங்களில் அவை வெற்றிகரமாக இருக்கும், மற்ற நேரங்களில், நாங்கள் தவறு செய்திருப்போம். இருந்தாலும், சிறந்த வழி எப்போதும் நம்முடன் இருக்கும் அனுபவமும் கற்றலும் ஆகும். நாம் நடக்கா விட்டால், நாங்கள் தடுக்கப்படுகிறோம், உருவாகவில்லை.

தோல்வியுற்றதற்காக நம்மைக் குற்றம் சாட்டுவது நமது மனித நிலையை ஏற்றுக் கொள்ளாமல், தொடர்ந்து கற்றல் மற்றும் முன்னேறுவதற்கான வாய்ப்பை இழப்பது. நாம் எவ்வளவு தவறுகளைச் செய் கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் வாழ்கிறோம் என்று சொல்லலாம்.

வாழ்க்கை கற்றல், நீங்கள் கற்றலை நிறுத்தும்போது, நீங்கள் இறந்துவிடுவீர்கள்

வயதாகிவிடுவது தெளிவான அனுபவங்க ளையும் போதனைகளையும் சேகரிப்பதாகும். இல்லையெனில், ஆண்டுகள் வெறுமையாக இருக்கும், நாங்கள் அவற்றைக் கடந்துவிட்டோம் என்று சொல்லலாம், ஆனால் அவர்கள் எங்களுக்கு வழங்கியிருக்கக்கூடிய எல்லாவற்றையும் நாங்கள் கசக்கவில்லை.

நாம் விரும்பும் விடயங்கள் மற்றும் அதை எவ்வாறு பெறுவது என்பது பற்றி மேலும் மேலும் அறிந்துகொள்ள ஒரு சிறந்த வாய்ப்பாகும். அவ் வாறு செய்ய, ஆண்டுகளை குவிப்பதைத் தவிர, கற்றல் அனுபவங்களை நாங்கள் குவிக்கிறோம்; சில தவறுகளுடன், மற்றவர்களை காட்டிலும் வெற்றிகளுடன்நாம் முன்னேற முடியும் . எனவே நமது தோல்விகளுக்குப் பிறகு கற்றல் வலுவடைந்து வருகிறது, விழுந்த பின் எழுந்து, இருக்கும்போது நிறைவடைகிறது வாழ்க்கை , அதுவே நம்மை பலப்படுத்துகிறது. எனவே, முடிவுக்கு பயப்படாமல், வித்தியாசம ான மற்றும் பல அனுபவங்களை வைத்து வாழ்வதே சிறந்த வழி.

வீழ்ச்சி தவிர்க்க முடியாதது. நாம் மிகச் சிறிய வயதிலிருந்தே இதைச் செய்கிறோம், நடக்க, சைக்கிள் ஓட , பாய்வதற்கு, குதிப்பதற்கு போன்றவற்றைக் கற்றுக் கொள்ளும்போது அத்தோடு நாம் முன்னேறவோ, எங்கள் திட்டங் களை அடையவோ, மேலும் செல்லவோ அல் லது நம்மை உருவாக்காத ஒன்றை மாற் றவோ விரும்பும்போது தோல்வி தவிர்க்க முடி யாதது. எனினும், எங்கள் திறன்களைக் கற்றுக்கொள் வதும் கண்டுபிடிப்பதும் முக்கியமானது .

தொகுப்பு -
ப்ரியமதா பயஸ்-

# சில யதார்த்த உளவியல்




யாரைக் கல்யாணம் கட்டி எப்படி இருந்தாலும், வேறு ஒருவரை கல்யாணம் பண்ணியிருக்கலாம் என்று கிட்டத்தட்ட எல்லாருமே மனசுக்குள் நினைக்கி றார்கள்.

எப்படியாவது சொந்தமா ஒரு வீடு வாங்கிட வேண்டும் என்ற குறிக்கோள் ஒரு வீட்டோடு நின்றதாக இல்லை. தன் சில பல கஷ்டங்கள் மற்றவர்களுக்கும் இருக்கும் என்று தெரிந்தால் மக்களுக்கு கொஞ்சம் ஆறுதலா இருக்கும் .

'உனக்கும் கீழே உள்ளவர் கோடி' பாடல் வரிய புகழ்ந்து தள்ளி மெச்சும் அளவுக்கு அதை 'நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு'வதெல்லாம் இல்லை.

சாமி இருக்கிறது என்று நம்பி கும்பிடுபவர்களை விட பயத்தில் கும்பிடுபவர்கள்தான் அதிகம்.

# வாழ்க்கை ஒரு முடிவில்லா போராட்டம்



நீங்கள் உயிரையே வைத்திருக்கும் ஆண்/பெண் என்றாவது ஒரு நாள் எழுந்து நான் உன்னை காதலிக்கவில்லை என்று உங்களிடமே சொல்வார்.

தாய், தந்தை, உடன்பிறப்பு, நல்ல நண்பர்கள் தவிர வேறு யாரும் உங்களை பற்றி கவலைப்படப்போவதில்லை. ஆம், அனைவரும் சுய நல வாதிகள்.

உங்களுடன் சிரித்து பழகும் அனைவரும் உங்கள் நண்பர் அல்ல.ஏறக்குறைய எல்லோரும் உங்களை உங்களின் தோற்றம் மற்றும் வருமானத்தை வைத்து எடை போடுவார்கள். யாருடைய வாழ்க்கையிலுருந்தும் நீங்கள் எளிதாக மாற்றப்படலாம்

அனைத்தும் தற்காலிகமானது. எந்த ஒரு பொருளோ அல்லது உடமையுடனோ உங்களை அதிகம் இணைத்துக்கொள்ள வேண்டாம்.

உங்கள் திட்டங்கள் உங்களை கைவிடும். மாற்றுத் திட் டங்களை உருவாக்கி கடினமாக உழைக்கவும்.

சமூக வலைதளங்களில் தங்களை மகிழ்ச்சியாக காட்டி கொள்பவர்கள் நிஜ வாழ்வில் மகிழ்ச்சியாக இருப்பதில்லை.

உங்களின் திட்டங்களை யாரிடமும் வெளிப்படுத்தாதீர்கள். அவர்கள் உங்களை புகழலாம். ஆனால் உங்கள் திட்டங்களை வெளிப்படுத்திய நீங்கள் அவர்களுக்கு ஒன்றுமே இல்லை.

நீங்கள் ஒரு நாள் கண்டிப்பாக மரணிக்கப் போகிறீர்கள். நீங்கள் பெருமைப்படக்கூடிய வாழ்க்கையை வாழ்வது நல்லது.

நம்பிக்கை என்பது ஆபத்தான விடயம்.

புகைப் பிடிப்பதை விட எதிர்பார்த்தலும், ஒப்பிடுதலும் அதிக உயிர்களை கொல்கின்றன.

பள்ளி கல்லூரிகள் பெரும்பாலும் உங்களை அடுத்தவரின் கனவுகளை உருவாக்க/நினைவாக்க ஆயத்தப்படுத்துகின்றன.

எல்லோரும் உங்களை விரும்பினால் பெருமைப்பட வேண்டாம், மலிவான பொருள்களை வாங்கக்கூட்டம் அலை மோதும்.

நீங்கள் சந்திக்கும் சிலர் முட்டாள்தனமாக இருப்பார்கள். அவர்களை புறக்கணிக்க முயற்சி செய்யுங்கள்.

நீங்கள் யாராக இருந்தாலும்/ என்னவாக இருந்தாலும் மக் கள் உங்கள் பின்னால் கிசுகிசுப்பார்கள்.

மற்றவர் உங்களை மதிக்கும் படி நடக்க செய்ய நெடும் நாள் ஆகும். ஆனால் அதை மாற்றுவது மிகவும் எளிதானது.

உங்களைப் பின்தொடரும் அனைவரும் உங்கள் ரசிகர் அல்ல.

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

**தரம் - 7** **கணிதம்** **அலகு 12**

## அட்சர கணிதக் கோவைகள்

**01. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை பூர்த்தி செய்க.**

| | கோவை | கோவையில் உள்ள தெரியாத கணியம் | தெரியாக் கணியத்தின் குணகம் | கோவையில் உள்ள உறுப்புக்கள் | உறுப்புக்களுடன் தொடர்பு பட்ட கணிதச் செய்கைகள் |
|---|---|---|---|---|---|
| | 3a+ 5 | a | 3 | 3a, 5 | x , + |
| | 2x | x | 2 | 2 x | X |
| 1 | 2b - 3 | ----------- | ----------- | ----------- | ----------- |
| 2 | 11 Z | ----------- | ----------- | ----------- | ----------- |
| 3 | 20 - 9m | ----------- | ----------- | ----------- | ----------- |
| 4 | p - 10 | ----------- | ----------- | ----------- | ----------- |
| 5 | a + 2 | ----------- | ----------- | ----------- | ----------- |

**02. அட்சர கணிதக் கோவைகளை உருவாக்குக.**

01. ஓர் எண்ணின் பெறுமானம் a இனால் குறிக்கப்பட்டுள்ளது அவ் எண்ணின் அரை மடங்கிலும் 4 கூடிய எண் யாது?

-------------------------------------------------------------------

02. m எனும் எண்ணின் இரு மடங்கிலும் 15 கூடிய எண்ணைக் காண்க?

-------------------------------------------------------------------

03. ஒரு அப்பிளின் விலை a எனின் அவ்வாறான 5 அப்பிளின் விலை யாது?

-------------------------------------------------------------------

**03. அட்சர கணித உறுப்புகளைச் சுருக்குக.**

01. 25P + 15q + 11 q + 2P
= 25P + 2P + 15q + 11q
= 27P + 26 q

02. 4x + 5y + 3x + 7

03. 3x + 2y + 2x + 7

04. 3a + 4 + 5b + 3

05. 3x + 6k + 5x + 3k + 9

06. 5P + 4q + 2P + q

**04. a = 9 எனின் பின்வரும் கோவைகளின் பெறுமானம் காண்க.**

01. 3a - 5
= 3 x 9 - 5
= 27 - 5
= 22

02. 5 (a - 2)

03. 25 - 2a

04. a + 4

05. 3a - 3

**செல்வி ப. லாவண்யா - யா/ முத்துத் தம்பி மகா வித்தியாலயம்**

**இவ்வினாத்தாளுக்குரிய விடைகள் நாளையதினம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.**

# மரணதண்டனைக் கைதியை விடுதலை செய்வதற்கு முலாம் பூசப்பட்டதே அரசியல் கைதிகள் விடுதலை

## சிறிதரன் எம்.பி. காட்டம்



அரசியல் கைதிகள் 16 பேரின் விடுதலை என்பது இந்த அரசின் மரணதண்டனைக் கைதி ஒருவரை விடுதலை செய்யும் வகையில் முலாம் பூசப்பட்ட விடயமாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று (சனிக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் சிவஞானம் சிறிதரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

அரசியல் கைதிகள் 16 பேரின் விடுதலைக்குக் காரணமான அனைவருக்கும் நன்றிகளைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் சிறையில் எதிர்காலத்தைத் தொலைத்து வாழுகின்ற ஏனைய அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்வதற்கு இந்த அரசாங்கம் முன்வர வேண்டும்.

இதேவேளை மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒரு கைதியின் விடுதலைக்காக இந்த 16 அரசியல் கைதிகளை விடுதலை செய்துள்ளமை ஒரு முலாம் பூசப்பட்ட ஒரு விடயமாகக் கருதப்படுகின்றது. - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நல்லூர் றோட்டறிக் கழகத்தினால் மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு




யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளரின் கோரிக்கைக்கு அமைவாக வைத்தியசாலையின் பாவனைக்கென றோட்டறி ஆஸ்திரேலியா உலக சமூக அபிவிருத்தி சேவை, கில்ஸ் கெலிவிலே றோட்டறிக் கழகம் மற்றும் ஆஸ்திரேலியா மருத்துவ உதவி நிதியம் ஆகியவற்றின் அனுசரணையில் சுமார் 3 கோடி 60 லட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் எஸ். சிறிபவானந்தராஜாவிடம் கையளிக்கப்பட்டது.

இதில் மின்சாரத்தில் இயங்கும் 120 நோயாளர்கள் கட்டில்கள் மற்றும் அதற்கான மெத்தைகளும் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் நல்லூர் றோட்டறிக் கழகத்தின் தலைவர் றோட்டேறியன் துரைமணி ரமணன், முன்னாள் தலைவர் வைத்தியர் றோட்டேறியன் மகேசு பிரதீபன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திட்டமிடல் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஈ.மயூரன் மற்றும் நல்லூர் றோட்டறிக் கழக அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir



"விழுந்தவனை மாடேறி மிதிப்பது போன்று கொரோனா,புரவிப்புயல், கப்பல் தீ, எரிபொருள் விலை ஏற்றம் நசுக்கும் நிலையில் அரசு திரும்பிப் பார்க்க வில்லை என்கின்றனர் மீனவர்கள்

# நெருக்கடியில் மீனவர் வாழ்வு

– ந.லோகதயாளன் –

நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் விலையேற்றம், கொரோனாத் தாக்கம், கப்பல் தீப்பற்றியமை, இயற்கை அனர்த்தம் உள்ளிட்ட அனைத்திலும் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றபோதும் அரசு எம்மை கண்டு கொள்ளவில்லை என கிளிநொச்சி மாவட்ட மீனவ அமைப்புக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

**வலைப்பாடு மீனவர்**

வலைப்பாடு புனித அன்னமார் கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் எஸ். இமானுவேல் இது தொடர்பில் தெரிவிக்கையில் -

எரிபொருள் நிலையத்திற்காக 11 கிலோ மீற்றர் தூரம் பயணிப்பதற்காக லீற்றருக்கு 10 ரூபா ஏற்கனவே அதிகமாக செலுத்தும் எமக்கு மேலும் விலை அதிகரித்து இந்த அரசு அவலத்தை ஏற்படுத்துகின்றது.

ஏற்கனவே புரவிப் புயலில் படகுகள், இயந்திரங்கள் அழிவடைந்த நிலையில் அதன் விவரத்தைச் சமர்ப்பித்தும் அரசு எம்மை திரும்பிப் பார்க்கவில்லை. கொரோனாவினால் பெரும் நெருக்கடியையும் சந்திக்கும் நிலைமையில் வாழ்வாதாரத்தை சீர்குலைக்கும் வகையில் எரிபொருள் விலையை அதிகரித்த அரசு பதில் கூற வேண்டும். - என்றார்.

**நாச்சிக்குடா கடற்றொழிலாளர்**

நாச்சிக்குடா நல்லாயன் கடற்றொழிலாளர் சங்க செயலாளர் செபஸ்தியாம்பிள்ளை தோமஸ் அமலமாஸ் கருத்து தெரிவிக்கையில் -

எமது பகுதியில் 400 வரையிலான படகுகள் தொழிலில் ஈடுபடுகின்றன. இதில் தினமும் தொழிலில் ஈடுபடுபடுவதற்கு குறைந்தது 800 லீற்றர் எரிபொருள் தேவை. தற்போது 7 ரூபா விலை அதிகரிப்பால் நாள் ஒன்றிற்கு 5 ஆயிரத்து 600 ரூபா மேலதிக செலவு ஏற்படுகின்றது. மாதம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரையில் இது நேரும். இதேநேரம் கொழும்பில் கப்பல் எரிந்தமையினால் நிலவும் அச்ச உணர்வால் விலை வீழ்ச்சி, ஏற்றுமதியில் பாதிப்பு என்பன மீனவர்களை வாட்டுகின்றன. இந்த நிலையில் கடலட்டை பண்ணை விநியோகத்திலும் எமது சங்கத்தினர் பாதிக்கப்படுகின்றோம். - என்றார்.

**பள்ளிக்குடா தொழிலாளர்**

பள்ளிக்குடா நாகதுறைச் சங்க செயலாளர் சிவசுப் பிரமணியம் கருத்து தெரி விக்கையில் -

எமது சங்கத்தின் கீழ் 380 குடும்பங்கள் உள்ளன. நாள் ஒன்றிற்கு ஒரு படகிற்கு 40 லீற்றர் எரிபொருள் தேவைப்படும். மண்ணெண்ணையை நாட்டில் அதிகம் நம்பி வாழ்பவர்கள் மீனவனும் விவசாயியும் தான். நீண்ட தூரம் பயணிக்க வேண்டிய தொழிலாளராகிய எமக்கு இது பெரிய பாதிப்பாகவுள்ளது. கப்பல் தீ பற்றிய பின்பு மீனின் தரம் தொடர்பில் எழும் அச்சத்திற்கும் அரசு உரிய பதிலளிக்க வேண்டும். - என்றார்.

**இரணைமாதா மீனவர்கள்**

இரணைதீவு இரணைமாதா கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் சிவானு ஜோன் கெனடி தகவல் தெரிவிக்கையில் -

எமது சங்க உறுப்பினர்களிற்கு மட்டும் நாள் ஒன்றிற்கு ஆயிரம் லீற்றர் எரிபொருள் போதாத நிலமையில் ஏற்கனவே கொரோனா, புரவிப் புயல் என வாழ்வாதாரப் பாதிப்பில் தற்போது கப்பல் விவகாரத்துடன் எரிபொருள் விலை ஏற்றமும் சேர்த்து எம்மை மேலும் பாதித்துள்ளன. எரிபொருளிற்கு ஏற்பட்ட விலை ஏற்றத்தினை அரசு மானியமாக வழங்க முன் வரவேண்டும். - என்றார்.

**பூநகரி மீனவர்கள்**

கிளிநொச்சி பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தின் பிரதிநிதி விவரம் தெரிவிக்கையில் -

இவ்வளவு இழப்புக்கள், இவ்வளவு பாதிப்புக்காலத்திலும் அரசு 5 ஆயிரம் ரூபா நிவாரணம் என அறிவித்த போதும் அது சமுர்த்தி இருக்கின்ற மீனவர்களிற்கு மட்டுமே கிட்டியது. சமுர்த்தி நிவாரணம் இல்லாத மீனவர்கள் எவருக்கும் கிடைக்கவில்லை. உண்மையில் அரசின் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு மீனவர்கள், விவசாயிகள் அனைவருக்கும் பாகுபாடுகள் இன்றி வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

நாட்டில் வலைக்கான நூலில் இருந்து மால் வரைக்கும் விலை அதிகரித்து காணப்படுகின்றது. இதேபோன்று எரிபொருள் விலை ஏற்றம் ஒரு புறம் என்றால் மறுபுறத்தே அரசி முதல் நுகர்ச்சிப் பொருள்களுக்கு விலை ஏற்றம். இதனால் அதிகம் பாதிக்கப்படுபவன் மீனவனாகவே இருக்கின்றான். அதேநேரம் பெண் தலைமைத்துவ குடும்பங்களும் அதிகமாகவே உள்ளன. இன்று கல்வி என்பது போனில் பெறும் விடயமாகிவிட்டது. ஆனால் நமது கிராஞ்சியில் அது எட்டாக் கனியாகவே உள்ளது. அதற்கான போன் வசதி இல்லை. இருப்பவர்களிற்கும் சமிக்கைகள் கிடைப்பதில்லை. இரணைதீவில் தெளிவில்லை. அப்படியானால் எமது மாணவர்களின் நிலைமை என்ன?

எரிபொருளுக்கு விலையை நிர்ணயித்து அடிக்கடி ஏற்றும் அரசு, மீனவர்கள் பிடிக்கும் மீனுக்கு ஒரு நிலையான விலையை இன்று வரை தீர்மானிக்கவில்லை.ஏனெனில் இது மீனவனின் விடயம்தானே என்ற அசிரத்தைதான் காரணம்.











காலைக்கதிர் Kalaikkathir

# கம்மன்பிலவுக்கு எதிரான பிரேரணை தொடர்பில் அடுத்தவாரம் அறிவிப்பு




கொழும்பு, ஜூன் 27

அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளும் தினம் தொடர்பில் அடுத்த வாரம் அறிவிக்கப்படவுள்ளது.

ஜூலை மாதம் முதலாம் திகதி இடம்பெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்படும் என நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இதன்போது, அடுத்த நாடாளுமன்ற அமர்வு வாரத்தில், எத்தனை நாள்களுக்கு அமர்வை நடத்துவது என்பது பற்றியும் தீர்மானிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

43 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்ட உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை, கடந்த 22 ஆம் திகதி, நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் வைத்து, சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது.

## மணமகள் தேவை

வயது 43, இந்து கோவியர், கிளிநொச்சி, பிள்ளைகள் இல்லாத விவாகரத்தான அரச சேவையில் உள்ளவருக்கு மணமகள் தேவை. பிள்ளைகள் இல்லாத விதவைகள், விவாகரத்தானவர்களும் ஏற்கப்படும்.

076 549 8931

# அடிமட்ட வாக்காளர்களுடன் இணைந்து பணியாற்ற ஐக்கிய தேசியக் கட்சி முடிவு

வரவிருக்கும் மாகாண சபைத் தேர்தல் மற்றும் பிற தேர்தல்களை இலக்காகக் கொண்டு கட்சியில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்துள்ளது.

பல சமீபத்திய மாற்றங்கள் காரணமாக, கட்சியிலிருந்து தங்களைத் தூர விலக்கிக் கொண்ட பலர் மீண்டும் வந்து கட்சியை முன்னோக்கி எடுத்துச் செல்ல விருப்பம் தெரிவித்துள்ளனர் எனக் கட்சி அறிவித்துள்ளது.

அதன்படி, ஐக்கிய தேசியக் கட்சி அடிமட்ட வாக்காளர்களுடன் இணைந்து பணியாற்றவும் கட்சியின் கொள்கைகளை அவர்களுக்குத் தெரிவிக்கவும் தயாராகி வருகிறது.

இதற்கிடையில், ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்ற பின்னர், மேலும் பலர் தீவிர அரசியலுக்கு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.




மணமகன் விவரம்

பிறந்த திகதி – 1990.4.6 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – மகம்
கி.பா – 11 செவ் – 05 இல்
தகைமை –கல்வியியல் கல்லூரி
தொழில் – ஆசிரியர்
எதிர்பார்ப்பு – அரசசேவை மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1993.10.11 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – மகம்
கி.பா – 29 செவ் – 7 இல்
தகைமை – B.sc Civil Eng தொழில் – Singapore Work
எதிர்பார்ப்பு – Eng, Doctor பட்டதாரி மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1984.9.20 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – பூசம்
கி.பா – 68 செவ் – 8 இல்
தகைமை – B.sc Software தொழில் – Software Eng
எதிர்பார்ப்பு – B.sc கொழும்பு மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1991.11.10 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – மூலம் 4
கி.பா – 16 3/4 செவ்/சூரி – 6 இல்
தகைமை – Network Eng தொழில் – UK Company
எதிர்பார்ப்பு – பட்டதாரி மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1984.5.23 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – சதயம்
கி.பா – 22 செவ் – 4 இல்
தகைமை – Accountant தொழில் – UK PR
எதிர்பார்ப்பு – UK or இலங்கை பட்டதாரி மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1995.6.7 மதம் – இந்து
ஜாதி – P பகுதி ஆண் நட்சத்திரம் – உத்தராடம் 2
கி.பா – 23 செவ் – 03 இல்
தகைமை – A/L தொழில் – Swiss Not PR
எதிர்பார்ப்பு – Swiss PRமணமகள் தேவை.

பிறந்த திகதி – 1993.4.30 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – மகம் 6'
கி.பா – 40 செவ் – 10 இல்
தகைமை – Bsc Software Eng
தொழில் – Company Colombo
எதிர்பார்ப்பு – பட்டதாரி அரச சேவை மணமகள் 5'6' மேல் தேவை.

பிறந்த திகதி – 1988.8.21 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – அனுஷம் 3
கி.பா – 48 செவ் – 7 இல்
தகைமை – M.B.B.S தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor, Dental Doctor மணமகள் தேவை.

மணமகள் விவரம்

பிறந்த திகதி – 1994.01.01 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – மகம்
கி.பா – 56 செவ் – 07 இல்
தகைமை – HNDA
தொழில் – Management Assistant
எதிர்பார்ப்பு – அரசசேவை மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1996.12.12 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – பூராடம் 2
கி.பா – 24 செவ் – 4 இல்
தகைமை – A/L தொழில் – France PR
எதிர்பார்ப்பு – France இல் சிக்கும்லங்கை மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1988.9.27 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – ரேவதி 4
கி.பா – 51 செவ் – 5 இல்
தகைமை – B.A தொழில் – D.O அரச சேவை
எதிர்பார்ப்பு – அரச சேவை மணமகன், Engineer, Accountant ஆசிரியர் 1982 பின்பு.

பிறந்த திகதி – 1990.12.8 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – மகம்
கி.பா – 24 செவ் – 08 இல்
தகைமை – M.B.B.S. தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor or Engineer மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1987.9.7 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – சதயம்
கி.பா – 87 செவ்/சூரி– 1 இல்
தகைமை – B.sc தொழில் – விஞ்ஞான ஆசிரியர்
எதிர்பார்ப்பு – பட்டதாரி, அரச சேவை மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1992.1.4 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – மூலம்
கி.பா – 44 சூரி/செவ் – 12 இல்
தகைமை – M.B.B.S தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor or Engineer மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1983.4.20 மதம் – இந்து
ஜாதி – P பகுதி பெண் நட்சத்திரம் – புனர்பூசம் 1
கி.பா – 45 செவ்/சூரி – 1 இல்
தகைமை – B.sc
தொழில் – Administration Officer
எதிர்பார்ப்பு – வெளிநாட்டு உள்நாட்டு அரச சேவை மணமகன்.

பிறந்த திகதி – 1992.2.28 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – பூராட் 2
கி.பா – 57 செ – 8 இல்
தகைமை – M.B.B.S தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor or Engineer கொழும்பு வேலை மணமகன்.



ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000

# ஜனாதிபதியின் உரை; மக்கள் சக்தி விசனம்



நாட்டு மக்களுக்கான ஜனாதிபதியின் உரை தொடர்பாக விமர்சிக்க ஐக்கிய மக்கள் சக்தி நேற்று (சனிக்கிழமை) விசேட ஊடக சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தது.

மக்கள் எதிர்பார்த்த விதமாக ஜனாதிபதியின் உரை அமையவில்லை என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

தற்போது நாடு எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதி தனது உரையில் தெரிவிப்பார் என்ற மக்களின் எதிர்பார்ப்பு பொய்த்துப்போய் விட்டதாகவும் கூறினார்.

மேலும் போதைப்பொருள் கடத்தல், இயற்கை பேரழிவுகள் மற்றும் அரச ஊழியர்கள் தொடர்பாக ஜனாதிபதி தவறான கருத்தை முன்வைத்திருந்தார் எனவும் ரஞ்சித் மத்தும பண்டார குறிப்பிட்டார்.

# சிறுபான்மை மக்களின் போராட்டத்துக்கு விடிவு கிடைத்துள்ளது என்கிறார் ஜாஹீர்

சிறுபான்மை மக்களின் போராட்டத்துக்கு தற்போதைய அரசாங்கத்தின் ஊடாக விடிவு கிடைத்துள்ளதென காரைதீவு பிரதேச சபை பிரதி தவிசாளர் ஏ.எம். ஜாஹீர் தெரிவித்துள்ளார்.

நேற்று (சனிக்கிழமை) அம்பாறையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நல்லெண்ண அடிப்படையில் தமிழ் அரசியல் கைதிகள் தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதனூடாக சிறுபான்மை மக்களின் போராட்டத்துக்கு தற்போது விடிவு கிடைத்துள்ளது. ஆகவே, ஜனாதிபதிக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன், ஏனைய அரசியல் கைதிகளையும் விடுவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வோம் என அமைச்சர் நாமல் ராஜபக்ஷவும் உறுதியளித்துள்ளார். அதனை நாம் வரவேற்கின்றோம்.

இதேவேளை நல்லாட்சி அரசாங்கத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கம் வகித்திருந்த போதும் கூட அரசியல் கைதிகள் விவகாரத்தில் எந்தவொரு முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இதனால் அவர்கள் அனைவரையும் முதுகெழும்பு இல்லாத அரசியல்வாதிகளாகவே பார்க்கத் தோன்றுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# சன நெரிசலான இடங்களுக்கு செல்வதை தவிர்க்க கோருகிறார் இராணுவத் தளபதி

வார இறுதிநாள்களில் கடைகள் உட்பட சனநெரிசலான இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு இராணுவத் தளபதி சவேந்திர சில்வா பொதுமக்களிடம் கேட்டுகொண்டுள்ளார்.

கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டாலும் மாகாணங்களுக்கு இடையேயான பயணக் கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என்றும் அவர் கூறினார்.

எனவே நாட்டில் கொரோனாத் தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்த பொது மக்களின் ஆதரவு மிகவும் அவசியமானது என்றும் இராணுவத் தளபதி குறிப்பிட்டார்.

சிங்கள தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

இதேவேளை, கேகாலை மாவட்டத்தின் 2 கிராம சேவகர் பிரிவுகள் நேற்று அதிகாலை 6 மணிமுதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அல்கொட கிராம சேவகர் பிரிவுக்குப்பட்ட ஹிகுலோய, மஹவத்த, ஹலமட ஆகிய பகுதிகளும் டென்ஸ்வோர்த் தோட்ட கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என இராணுவத்தளபதி அறிவித்துள்ளார்.



## ஐரோப்பாவுக்கு அனுப்பும் அஞ்சல் பொருள்கள் வரிக்கொள்கையில் ஜூலை முதல் திருத்தம்

கொழும்பு, ஜூன் 27

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு அனுப்பப்படும், கடிதம் தவிர்ந்த ஏனைய அனைத்து அஞ்சல் பொருள்களுக்கான வரிக்கொள்கை எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் திருத்தப்படவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அஞ்சல்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன அறிக்கை ஒன்றின் மூலம் அறிவித்துள்ளார்.

இந்த வரிக்கொள்கை திருத்தம், பெறுமதிசேர் வரி மற்றும் ஏனைய தீர்வை வரிக்கொள்கைகளுக்கு உட்பட்டதாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 150 ஜூரோவுக்கு குறைந்த பெறுமதியுடைய அனைத்து அஞ்சல் பொருள்களுக்கும், அனுப்புநர் நேரடியாக குறித்த வரியை ஐரோப்பிய ஒன்றியத்தின் பயணமுடிவு நாட்டிற்கு செலுத்த வேண்டும் என அஞ்சல்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

## கடற்றொழில் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தார்

எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பலால் பாதிக்கப்பட்ட கடல் தொழிலாளர்களுக்கு நட்டயீடு பெற்றுக்கொடுப்பதற்காக மிகவும் அர்ப்பணிப்புடன் பாடுபட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் கொழும்பு மாவட்டத்துக்கான பணிப்பாளர் எச். டி. ரோஹித்த என் சலம் கொவிட் 19 தொற்றால் பாதிக்கப்பட்டு கொத்தாலவல பாதுகாப்பு பல்லைக்கழக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) உயிரிழந்தார் எனக் கடற்றொழில் பணிப்பாளர் நாயகம் சுசந்த காவத்த தெரிவித்துள்ளார்.

பேர்ள் கப்பலால் பாதிக்கப்பட்ட கடல் தொழிலாளர்களுக்கு நட்டஈடு பெற்றுக்கொடுப்பதற்கான தகவல்களை திரட்டும் பணியில் கடந்த சில நாள்களாக எச்.டீ. ரோஹித்த என்சலம் ஈடுபட்டு வந்தார். அவரது குடும்ப அங்கத்தவர்களுக்கோ, நெருங்கிய உறவினர்களுக்கோ அல்லது நண்பர்கள் எவருக்கும் கொவிட் தொற்று ஏற்பட்டிராத நிலையில், கடற்றொழிலாளர்களுக்கு நட்டஈடு பெற்றுக் கொடுப்பதற்காக கடற்றொழிலாளர்களுடன் நெருங்கி செயற்பட்டு வந்த போதே கொவிட் அவருக்கு தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற ஐயம் ஏற்பட்டுள்ளது.

1986 ஆம் ஆண்டு கடற்றொழில் பரிசோதகராக சேவையில் இணைந்து கொண்ட ரோஹித்த 2008 ஆம் ஆண்டில் உதவி பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றார். திருமலை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் உதவி பணிப்பாளராக கடமையாற்றியுள்ள அவர் இறக்கும் போது கொழும்பு மாவட்டத்துக்கான உதவிப் பணிப்பாளராக கடமையாற்றினார்.

59 வயதான அவர் எதிர்வரும் 2021.07.30 ஆம் திகதி சேவையிலிருந்து ஓய்வு பெறவிருந்த நிலையில் இவ்வாறான அபாயம் மிக்க சூழ்நிலையில் ஓய்வுக்கு முன்னரான விடுமுறையை கூட பெற்றுக் கொள்ளாமல் அர்ப்பணிப்புடன் கடமையாற்றிய ஓர் அதிகாரியாவார்.

அன்னாரது மரணத்தையொட்டி அனுதாபம் தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பேர்ள் கப்பல் தீப்பற்றிக் கொண்டதன் காரணமாக கடற்றொழிலில் ஈடுபட முடியாத கடல் தொழிலாளர்களுக்கு நட்டஈடு பெற்றுக் கொடுப்பதற்காக மிகவும் அர்ப்பணிப்புடன அவர் களது விவரங்களை திரட்டும் பணியில் ஈடுபட்டு வந்த நிலையிலேயே அவருக்கு கொவிட் 19 தொற்று ஏற்பட்டதாகவும் அவரது மறைவை முன்னிட்டு கடற்றொழில் அமைச் சின் ஊழியர்கள் மற்றும் கடற்றொழில் திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களின் சார்பில் தனது ஆழ்ந்த அனுதாபத்தை அன்னாரின் குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் உறவினர்களுடன் பகிர்ந்து கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

## விசேட சோதனை நடவடிக்கையில் மட்டக்களப்பில் பொலிஸார் ஈடுபாடு

மட்டக்களப்பில் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்துள்ளமையின் காரணமாக சுகாதாரக் கட்டுப்பாடுகள் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதவர்களை கண்டறியும் விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், பொலிஸார், சுகாதாரத்துறையினர் இணைந்து இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது அறிவுறுத்தல்களை மீறி வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்ட அனைவரும் அன்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

மேலும் சுகாதார நடைமுறைகளை மீறிச் செயற்பட்டவர்களுக்கு, கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டமைகுறிப்பிடத்தக்கது.

## கொரோனாத் தடுப்பூசி கொள்வனவு: இலங்கைக்கு உலக வங்கி பாராட்டு



கொரோனாத் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்வதில் இலங்கை பின்பற்றும் முறைமை தொடர்பாக உலக வங்கி பாராட்டுத் தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தலைமையில் கொரோனாக் கட்டுப்பாட்டு விசேட செயலணி, கூடிய போதே இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசிகள் கொள்வனவின் போது பின்பற்றப்படும் வெளிப்படைத் தன்மை போன்ற விடயங்கள், தெற்காசிய நாடுகளில் உள்ள ஏனைய நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் முன்னிலையில் காணப்படுவதாக உலக வங்கி அடையாளப்படுத்தியுள்ளது.

எனவே தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்யும் போது, உலக வங்கியின் இணையத்தளத்தின் ஊடாகக் கொடுப்பனவுகளை செய்வதற்கான வாய்ப்பு, இலங்கைக்குக் கிடைத்துள்ளதாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பிரசன்ன குணசேன மேலும் குறிப்பிட்டார்.




காலைக்கதிர் Kalaikkathir

# கொரோனாவுக்கு எதிரான போராட்டம்

## ஓர் அனுபவத் தொடர்

அங்கம் 9

எந்திரி நவரட்னம் சுதாகரன்
பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர்,
முல்லைத்தீவு பிராந்தியம்.







**தனிமைப்படுத்தல் நிலையத்தின் விளையாட்டுக்களுக்கான வசதிகள்**

மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தவர்களைத் தனிமைப்படுத்தி முடக்கி வைத்தால் அவர்களது உடல், உள நலத்தை பாதித்துவிடும். எனினும், இயங்கச்செய்வதற்கு ஏற்ற வகையில் மாலை நேரத்தில் விளையாட்டு நடவடிக்கைகளில் (LOCK DOWN VOLLEY BALL COURT & CRICKET PITCH) ஈடுபடக்கூடிய வசதிகளும் காணப்பட்டன.

அங்கு தங்கியிருந்த ஆண்கள் இரு பிரிவினராகப் பிரிந்து கரப்பந்தாட்ட விளையாட்டில் ஈடுபட்டனர். நானும் அவர்களுடன் இணைந்து கரப்பந்து விளையாடினேன். மாலை 5.00மணி தொடக்கம் 6.30 மணி வரை தொடர்ச்சியாக விளையாடுவது உடலுக்கு நல்ல புத்துணர்வைக் கொடுத்தது. அவ்வாறே ஒரு சாரார் சிறிய இடத்திலும் கிரிக்கட் ஆடியதைப் பார்த்து மகிழ்ந்தேன். இங்குள்ளவர்கள் கொரோனாத் தொற்றாளர்கள் என்ற நிலையை மறந்து சுறுசுறுப்பாக இயங்கி ஒருவருக்கொருவர் நட்புடன் பழக வாய்ப்பேற்பட்டமையை என்னால் உணரமுடிந்தது. இரவு வேளைகளில் நண்பர்களுடன் ஒன்றிணைந்து Carom விளையாட்டில் ஈடுபடுவதுடன் ஆடல் பாடல்களுடன் பொழுதுகள் இனிதாகவே கழிந்தது.

**தனிமைப்படுத்தல் நிலைய பொழுபோக்கு வசதிகள் - Recreational Activities**

தொலைக்காட்சி வசதிகள் காணப்படாவிடினும் நோயாளிகளுக்கு தொலைபேசி பாவிக்க அனுமதி கொடுக்கப்பட்டிருப்பதால் அதிலேயே பலர் அதிக நேரத்தை செலவு செய்வதை காணக்கூடியதாக இருந்தது. அதேவேளை பலர் சிறுகுழுக்களாகப் பிரிந்து கரம், Cards போன்ற விளையாட்டுக்களை விளையாடி நேரத்தை கடத்துவதையும் குழுவாக மரநிழலில் அமர்ந்து அரட்டை அடிப்பதையும் வைத்தியசாலை நிர்வாகத்தைப் பற்றிய குறைநிறைகள் பேசப்படுவதையும் காணமுடிந்தது.

**தனிமைப்படுத்தல் நிலைய வணக்கஸ்தலங்கள்**

இந்த நிலையம் யாழ் தேசிய கல்வியியற்கல்லூரியில் அமைக்கப்பட்டிருப்பதால் ஏலவே ஒரு சைவக்கோயிலும் ஒரு கிறிஸ்தவ தேவாலயமும் அமையப்பெற்றுள்ளது. காலை தொடக்கம் மாலை வரை நோயாளிகள் வழிபட வருவதையும் அங்கு நேரத்தை கழிப்பதையும் சிலர் யோகாசனம், உடற்பயிற்சி செய்வதையும் காணக்கூடியதாக இருந்ததும் நானும் அதனை செயற்படுத்தினேன்.

மேற்சொன்ன அடிப்படை வசதிகளைக் கொண்ட இந்நிலையம் நோயாளிகளுக்கு ஆறுதல் அளிக்கும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. நான் கோப்பாய் கொரோனாத் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கியிருக்கும் போது இந்த விபரீதமான நிலைமையை விபரமாகக் கையாள வேண்டும் என எண்ணி, இக்காலப்பகுதியில் பயன்தரக்கூடிய, ஒருவரால் மட்டும் செயற்படுத்தக்கூடிய வேலைகளைச் செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் தெரிவு செய்து நடைமுறைப்படுத்தினேன்.

**தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்தவாறு குடும்பத்தினரை வலுவாக வைத்திருத்தல்**

அங்குள்ள சூழலினை Video Call இனூடாக எனது குடும்பத்தவர்களுக்கு காட்சிப்படுத்தினேன். நான் அங்கு எவ்வாறு இருக்கின்றேன் என்பதை அவர்கள் புரிந்துகொண்டார்கள். அத்துடன் எனது நேரங்களை வினைத்திறனாகவே செலவிட்டுக் கொண்டிருந்தேன். நான் இங்கிருந்து வீடு திரும்பும் வரை எனது குடும்பத்தனரை குறிப்பாக எனது வயது முதிர்ந்த பெற்றோர்கள் எவ்வித கவலையும் கொள்ளாது வலுவாக இருக்க செய்வதற்கு ஏற்றவாறு நான் நேர்வழியில் செயற்படவேண்டும் என எண்ணினேன். அதன்படி செயற்பட்டேன். அந்தவகையில் வீட்டிலிருந்து காவு வண்டியில் என்னை அழைத்துச்செல்லும் போது கூட நான் வெளிநாட்டுப்பயணம் செய்வதாக நினைத்து அந்த நடைமுறையிலேயே சென்றேன். அதேபோல அங்கு இருக்கும் போது, எனது சுறுசுறுப்பான, சந்தோசமான செயற்பாடுகள் ஒவ்வொன்றையும் படம் எடுத்தோ அல்லது Video Call மூலமாகவோ எனது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் நான் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளேன் எனக் காட்டினேன். இதன் மூலம் அவர்கள் திருப்தியடைந்திருப்பார்கள் என எண்ணினேன்.

அதேபோல், என்னோடு பணிபுரியும் சக உத்தியோகத்தர்களுக்கோ எனது நண்பர்களுக்கோ நான் கோப்பாய் தனிமைப்படுத்தல் நிலையம் சென்ற விடயத்தை தெரிவிக்க விரும்பவில்லை. ஏனெனில் அவர்களுக்கு மனஉளைச்சலை ஏற்படுத்தி நாளாந்த கடமைகளுக்கு இடையூறாக இருக்க விரும்பவில்லை. எனினும் அலுவலக நடைமுறைகளுக்கேற்ப மேலதிகாரிகளுக்கு இவ்விடயத்தை தெரியப்படுத்தினேன். அதேவேளை வீடு திரும்பியவுடன் அனைவருக்கும் இந்நிலைமையினை விவரித்தேன். அவர்கள் அனைவரும் அதனை ஏற்றுக்கொண்டமையுடன் இந் நெருக்கடியான நிலைமையினைத் திடமாகக் கடந்து வந்துள்ளீர்கள் என பாராட்டவும் தவறவில்லை.

தனிமைப்படுத்தல் நிலையத்தில் நேர் சிந்தனையுடன் என்னை வலுவாக வைத்திருத்தல்குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என்னை ஆறுதற்படுத்திய அதேவேளை, இக்கொடிய நோய்க்கு எதிராக வலுவாக இருக்க வேண்டிய தேவையும் இருந்தது. அதற்கு எனது வைத்திய நண்பர்கள் குறிப்பாக யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளரும், தற்போது வெளிநாட்டு பயிற்சியை மேற்கொள்ளும் முகமாக லண்டன் சென்றிருக்கும் வைத்திய கலாநிதி எஸ்.சத்தியமூர்த்தி அவர்கள் என்னுடன் தொடர்புகொண்டு ஆலோசனைகளைக் கூறினார்.


அதே போல இலகுவாக மேற்கொள்ளக்கூடிய பயிற்சிகள், யோகா போன்றவற்றைச் செய்யுமாறு கூறி அது தொடர்பான Video clips இனையும் அனுப்பிவைத்தார். அவற்றைப் பின்பற்றி காலை மாலை வேளைகளில் செய்து உடல் உள ஆரோக்கியத்தைப் பேணி இந்த வைரஸுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டேன்


**தனிமைப்படுத்தல் நிலையத்தில் உடற்பயிற்சி மற்றும் யோகா**

வழமையாகவே எனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் நான் சில உடற்பயிற்சிகளினை மேற்கொள்வது வழக்கம். தற்போது தனிமைப்படுத்தல் நிலையத்தில் கிடைத்த நேரத்தினை அதற்காப் பயன்படுத்திய போது அது இன்னும் எனக்குப் புத்துயுர்ப்பைத் தந்திருந்தது. இந்நோய்த்தாக்கத்தின் போது உடற்பயிற்சி மேற்கொள்வது நன்நிலையினை ஏற்படுத்தும் என்பதுடன் அத்தியாவசியமானதுமாகும்.

**தனிமைப்படுத்தல் நிலையத்தில் சிரமதான நடவடிக்கை**

சிகிச்சை நிலையத்தினை சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய கடைப்பிடிக்க வேண்டுமாயின் தனியே நிர்வாகத்தினால் சிறப்பாக செய்து முடிக்க முடியாது. எனினும் தொற்றாளர்களின் பங்குபற்றலினூடாக (Participatory Approach) செய்வதனூடாக ஓர் சிறந்த நடவடிக்கையாக அமையும் என்பதனை நன்குணர்ந்து எம்மாலும் இதில் சில செயற்பாடுகள் மேற்கொள்ளவேண்டுமெனின் ஓர் சிரமதான நடவடிக்கை மேற்கொள்ளவதற்கு, நான், என்னுடன் தங்கியிருந்தோரை அணுகியபோது அவர்களும் ஆர்வத்துடன் பங்குபற்றி எமது C1/C2 இற்கிடைப்பட்ட பகுதி சுத்தமாக்க முற்பட்டோம். அப்போது அங்கு வந்து பங்குபற்றியோர் அனைவரும் ஏதோ ஒரு வகையில் தாங்களும் பங்களிப்பு செய்தனர் என உணர்ந்து கொண்டார்கள்.







அவ்வாறு ஏனைய பகுதிகளும் அப்பகுதியில் உள்ளோரின் அனுசரணையுடன் செய்து முடிக்கப்பட்ட அதேவேளை, அங்கு கடமையாற்றும் சுகாதாரப் பணியாளர்கள் மேலும் திறம்பட வேலையினைச் செய்வதற்கு இது உந்துசக்தியாக அமைந்ததில் மனதிற்கு ஆறுதலளித்தது. வெறுமன குறைகளை மட்டும் கூறிக் கொண்டிருக்காது சில செயற்பாடுகளை நாங்கள் முன்னின்று செயற்படுத்த முனையும் போது, நிச்சயமாக அதில் பெரிய மாற்றத்தினை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்கனவே இருந்தமையும் இதற்கு ஒரு காரணமாக அமைந்திருந்தது.

தொடரும்.

காலைக்கதிர்
Kalaikkathir




# கொரோனாவுடன் சேர்ந்து பரவிய zoom வைரஸ்

● முன்சி பஸ்றி

காலங்கள் மாறினாலும் நேரங்கள் கழிந்தாலும் பாடசாலை நாட்கள் என்றுமே அழிவதில்லை. ஆலய மணியை அவதானித்ததுகூட இல்லை; ஆனால், பாடசாலை மணியோசைக்கு அடிபணிவோம். ஆசிரியர்களின் கற்பித்தல் ஓசை முதல் நண்பர்களின் சிரிப்பு ஓசை வரை நாள்தோறும் காதில் ஒலித்துக் கொண்டே இருக்கும். ஆசிரியர்கள் கூட்டம் என்றால் மகிழ்ச்சி மிகை மிஞ்சும் அதுவே பெற்றோர்கள் கூட்டம் என்றால் மனம் அஞ்சும்.

தினமும் நண்பர்களோடு பள்ளிக்குச் செல்வதும் வீட்டுக்கு வருவதும் ஒரு கலப்பு பயணமாகவே கருதுவோம். பாடசாலைக்குள் இருக்கும்போது வீட்டு ஞாபகம் வருவதில்லை ஆனால், வீட்டில் இருக்கும் போதும் பாடசாலை ஞாபகம் மனதை விட்டுப் போவதில்லை.

ஒரு நண்பனுக்கு பிரச்சினை என்றால் அங்கு பூகம்பம் வெடிக்கும். அதுவே ஆசிரியரைக் கண்டால் இதயம் துடிதுடிக்கும். பள்ளியில் மாத்திரம்தான் அனைவரும்பாடகர்கள், அனைவரும் நடனக்காரர்கள், அனைவரும் விளையாட்டு வீரர்கள், அனைவரும் நடிகர்கள், அனைவரும் இயக்குநர்கள் எனப் பல அவதாரங்கள் எடுக்கின்றோம்.

நாம் பூமியில் காணும் சொர்க்கம் பாடசாலை வாழ்க்கைதான். இந்த வாழ்க்கையைக் கடந்த பின்னரும் மீண்டும் கிடைக்காதா என ஏங்கும் உள்ளமே அதிகம். ஆனால், மனச்சாட்சியற்ற இந்தக் கொரோனா வந்ததும் இன்றைய மாணவர்களின் பள்ளி வாழ்க்கை கைபேசியில் கதை பேசுகின்றது. மாணவர்களுடன் மாணவர்களாக இணைந்து கற்க வேண்டிய நமது மாணவர் சமூகம் இன்று இணையவழி கற்பித்தலில் கற்றுக்கொண்டு இருக்கின்றது. கல்லூரி மற்றும் பள்ளிகளுக்கான வகுப்புகள் தொடங்கி பத்திரிகை, ஊடகங்கள், வணிகம், பொருளாதாரம், வங்கிச்சேவை, கலைகளுக்கான மெய்நிகர் மேடை எனப் பலவற்றுக்கும் இணைய சேவை இன்றைக்கு முக்கியமானதாக இருக்கின்றது.

ஏனைய நாடுகளோடு ஒப்பிடுகையில் இலங்கை நவீன தொழில்நுட்பத்தில் சாதாரண நிலையிலேயே இருந்தது. ஆனால், கொரோனா வந்ததும் நவீன தொழில்நுட்பத்தோடு நன்றாகவே பின்னிப் பிணைந்துவிட்டது. பாடசாலை மற்றும் கல்லூரி செயற்பாடுகள் மாத்திரமின்றி நிறுவனங்களின் உத்தியோகபூர்வ கூட்டங்கள் கூட கணினி ஊடாக நிகழ்நிலையில் நடக்கின்றன. மாணவர்கள், விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள் என அனைவருக்கும் கணினி முன்னே காலம் கழிகின்றது.



> நாணயத்துக்கு இரு புறம் இருப்பதுபோல் இந்தத் தொலைத்தொடர்பு சாதனங்களிலும் நன்மை என்ற ஒரு புறமும், தீமை என்ற ஒரு புறமும் இருக்கின்றன. அதை நாம் ஆராய்ந்து பிரித்தறிந்து தீமை வாயிலை மூடி நன்மை வாயிலைத் திறந்து பிள்ளைகளை வழியனுப்பி வைக்க வேண்டும்.

மேலும் இணைய வழிக் கல்வியில் மாணவர்கள் எதைப் பார்க்கின்றார்கள்? இதை விளங்கிக்கொள்கின்றார்கள்? என்பதை நாம் அறிய முடியாது. பாடசாலை ஆரம்பித்த பின்னரே இதை அறியலாம். ஆனால், பாடசாலை எப்போது ஆரம்பமாகும் என்பதைத்தான் அறியவே முடியவில்லை. மாணவர்கள் இணையத்தின் உள்ளே நுழைந்தால் அவர்கள் பாடத்தைத்தான் படிக்கின்றார்கள் என்பதை நாம் முழுமையாக நம்பவும் முடியாது.

இவை மட்டுமன்றி பல்கலைகழக மாணவர்கள் வீட்டிலே வீணாக காலம் கழிக்காமல் கற்றல் – கற்பித்தல் செயற்பாடுகளை இணைய வழியில் ஆரம்பிக்குமாறு பீட அதிகாரிகளால் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான வசதிகள் அம்மாணவர்களிடம் இருக்குமா? கிராமப்புறங்களில் வாழ்க்கையை நடத்தவே வருமானம் போதாது. இப்படியான மாணவர்களின் நிலைதான் என்ன? இன்னும் சில பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்களுக்கு இத்தகைய இணையத்தள வசதிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் இன்னும் சிலருக்கு இந்த வசதிகள் இல்லை என்பது கசப்பான உண்மையே. மேலும், இவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்ட சில உபகரணங்களும் தரமற்றதாக இருந்தமையால் சிரமத்தை எதிர்நோக்குவது உண்மையே.

பின்னர் இவர்கள் சொந்தச் செலவில் உபகரணங்களை வாங்க வேண்டிய நிலைமை. இந்த செலவைச் சமப்படுத்துவதற்கு கற்பித்துக் கொடுக்கும் மாணவர்களிடமிருந்து கட்டணங்களை சற்று அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படுகின்றது. மாணவர்களும் வேறு வழியின்றி பாடங்கள் பயனளித்தது இல்லையோ கட்டணத்தை அளித்துத்தான் ஆக வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுவிட்டார்கள்.

இவை அனைத்தும் ஒருபுறம் இருக்க சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி என்பதுபோல் சிறுவர்கள் கையில் கையடக்கத் தொலைபேசியைக் கொடுத்துவிட்டோம்.


இன்றைய மாணவர்களை 24 மணி நேரமும் நிகழ்நிலையில் காணலாம். பெற்றோர்களும் பிள்ளைகள் படித்துக் கொண்டிருக்கிறார்கள் என நம்புகின்றார்கள். ஆனால் ஒளித்தோற்ற விளையாட்டுகளை பதிவிறக்கம் செய்து அதிலே அடிமையாகும் நிலை ஏற்படுகின்றது. இதனால் பாரிய மன உளைச்சலுக்கும் ஆளாகின்றார்கள் நம் மாணவர்கள். மேலும், கல்வி தொடர்பான காணொலிகளைக் காண வலை ஒளிக்குள் நுழையும் மாணவர்களின் மனதைச் சாக்கடைக்குள் தள்ளி ஆபாச காணொலிகள் கண்முன்னே வந்து நிற்கின்றது.

இவை மட்டுமன்றி நிகழ்நிலை குழு ஆய்வு என நண்பன், நண்பனின் நண்பன், அவனின் நண்பன் எனத் தகாத நட்புகள் வளர்வதோடு தேவையற்ற உறவுகளும் வளர்கின்றன.

zoom வகுப்பில் அந்தப் பாதிப்பு இல்லை. அது கல்விச் செயற்பாடுகளுக்கு மாத்திரமே இடம்பெறுகின்றன என்று கூறலாம். ஆனால், zoom இல் இருக்க வேண்டிய மாணவர்கள் இன்று முகநூல், படவரி இவற்றுக்குள் இருக்கின்றார்கள்.

எதற்கோ கண்டுபிடித்த தொலைபேசியில் எதையோ கண்டுபிடித்து அதை எதற்கோ பயன்படுத்தும் தீய நவீனத்துக்குள் இன்றைய மாணவர் சமூகம் நுழைகின்றது.

இன்றைய காலகட்டம் ஏதோ ஒரு வகையில் பிள்ளைகளின் கையில் தொலைபேசி சென்றாக வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகிவிட்டார்கள். zoom கல்வியில்தான் கற்றாக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் இருக்கும்போது அதைத் தவிர்க்க முடியாது. நாணயத்துக்கு இரு புறம் இருப்பதுபோல் இந்தத் தொலைத்தொடர்பு சாத



னங்களிலும் நன்மை என்ற ஒரு புறமும், தீமை என்ற ஒரு புறமும் இருக்கின்றன. அதை நாம் ஆராய்ந்து பிரித்தறிந்து தீமை வாயிலை மூடி நன்மை வாயிலைத் திறந்து பிள்ளைகளை வழியனுப்பி வைக்க வேண்டும்.

கல்வி கற்பது மாணவர்களின் உரிமை. அந்த உரிமையைச் சிறப்பாகப் பெற்றுக் கொடுப்பது எமது கடமை. மேலும் அதில் தவறான வழியில் செல்லாமல் பாதுகாப்பது எமது திறமை.

## நேற்றைய வினாக்களுக்கான விடைகள்

தரம் - 8 விஞ்ஞானம் அலகு 08

**01.**
1.யாதேனும் சடப்பொருளின் அமைப்பிலும் இயல்பிலும் மாற்றம் ஏற்படாது அப்பதார்த்தத்தின் நிலையில் ஏற்படும் மாற்றம் பௌதிக மாற்றம் எனப்படும்.
2.யாதேனும் சடப்பொருளின் கூறுகள் மாற்றப்பட்டு புதிய பதார்த்தங்கள் உருவாகும் மாற்றம் இரசாயன மாற்றம் எனப்படும்.
3.பௌதிக மாற்றம்
4.கரைக்கப்பட்ட நீரை ஆவியாக்கும் போது மீண்டும் திண்ம உப்பினைப் பெற முடியும்.
5.பளபளப்பான உலோக மக்னீசிய நாடா பிரகாசமான சுவாலையுடன் எரிந்து வெள்ளை நிற மீதியைத் தந்தது.
6.
1.இரும்பு துருப்பிடித்தல்
2.விறகு எரித்தல்
3.பட்டாசு கொளுத்தி வெடிக்கச் செய்தல்
4.ஒளித் தொகுப்புச் செயன்முறை
5.உலோகங்கள் மங்குதல்
6.நடுநிலையாக்கல் தாக்கங்கள்
7.
1.நீர் ஆவியாதல்
2.பனிக்கட்டி உருகுதல்
3.சீனி நீரில் கரைதல்
4.கற்கலை சிறு துண்டாக்கல்
5.விறகுகளை சிறு துண்டாக்கல்
6.இறைச்சியை மென்று உண்ணல்
7.காய்கறிகளை சிறிய துண்டாக்கல்.

**02.**
1.திண்ம நிலையில் காணப்படும் பொருளொன்று திரவமாக மாறுதல் உருகுதல் எனப்படும்.
2.திரவ நிலையில் காணப்படும் பதார்த்தம் திண்மமாக மாறுதல் உறைதலாகும்.
3.வாயு நிலையில் காணப்படும் பதார்த்தம் திரவமாக மாறுதல் ஒடுங்குதல் எனப்படும்.
4.திரவ நிலையில் காணப்படும் பதார்த்தம் ஆவியாக மாறுதல் ஆவியாதல் எனப்படும்.
5.திண்ம நிலையில் காணப்படும் பதார்த்தம் திரவ நிலைக்கு மாறாமல் வாயு நிலைக்கு மாறுதல் பதங்கமாதல் எனப்படும்.
6.பதார்த்தம் ஒன்று ஒரு பௌதிக நிலையிலிருந்து இன்னோர் பௌதிக நிலையில் மாறல் நிலைமாற்றம் எனப்படும்.
7. நிலை மாற்றத்தின் போது அமைப்பில், இயல்பில் மாற்றம் ஏற்படாது அல்லது அமைப்பில் மாற்றம் ஏற்பட்டு புதிய பதார்த்தங்கள் தோன்றாமையால் ஆகும்.
8.
1. திண்மம்
2.உருகுதல்
3.ஆவியாதல்
4.பதங்கமாதல்

**03.**
1.வெள்ளை
2.கபில நிற வாயு வெளியேறல், செந்நிறமான தூள் உருவாகும்.
3.வெள்ளை
4.நீலம்
5.
1.செப்புசல்பேற் கரைசலின் நீல நிறம் குறைவடையும்
2.இரும்பாணி மீது செந்நிற/ கபில நிறப் படிவுகள் தோன்றும்.
3.கரைசலின் வெப்பநிலை அதிகரிக்கும்.
6.இளம் நீல நிற வீழ்படிவு தோன்றும்.
7.
1.நாகத்துண்டு ஐதரோகுளோரிக் அமிலத்தில் கரையும்
2. வாயு வெளியேறும்.
8.
1.வாயு வெளியேறுதல்
2.நிறமாற்றம் ஏற்படல்
3.வெப்ப நிலை மாற்றம் ஏற்படும்
4.வீழ்படிவு தோன்றுதல்
5.ஒலி/ ஒளி உருவாதல்
6.மணம் ஏற்படல்
9.இரசாயனத் தாக்கங்களில் பங்குபற்றும் பதார்த்தங்கள் தாக்கிகள் எனப்படும்.
10.இரசாயனத் தாக்கத்தில் தோன்றும் புதிய பதார்த்தங்கள் விளைவுகள் எனப் படும்.
12.பதார்த்தங்களின் தகனம், கழிவுப் பொருள்கள் உக்குதல், காய்கள் பழுத்தல், வெடி பொருட்கள் வெடித்தல்,நொதியம் மூலம் உணவு சமிபாடு அடைதல்
11.

| சமன்பாடு | தாக்கிகள் | விளைவுகள் |
|---|---|---|
| A | மக்னீசியம், ஒட்சிசன் | மக்னீசியம் ஒட்சைட்டு |
| B | காபனீரொட்சைட்டு, நீர் | குளுக்கோஸ், ஒட்சிசன் |
| C | சோடியம் ஐதரொட்சைட்டு, ஐதரோகுளோரிக் அமிலம் | சோடியம் குளோரைட், நீர் |

**04.**
1.தொகுதியிலிருந்து சூழலுக்கும் சூழலிருந்து தொகுதிக்கும் பதார்த்தங்கள் பரிமாற்றமடையும் தொகுதி திறந்த தொகுதி எனப்படும்.
2.தொகுதியிலிருந்து சூழலுக்கு சூழலிலிருந்து தொகுதிக்கும் பதார்த்தங்கள் பரிமாற்றமடையாத தொகுதி மூடிய தொகுதி எனப்படும்.
3.பலூன் படிப்படியாக விரிவடையும்.
4. இரசாயனத் தாக்கத்தின் போது மொத்தத் திணிவில் மாற்றம் ஏற்படுவதில்லை அதாவது திணிவு மாறாது.
5.பிரான்ஸ் நாட்டு விஞ்ஞானி அன்டனி லாவோசியர்.

**05.**
1.வளியிலுள்ள ஒட்சிசன் தகனத்துணையி எனப்படும்.
2.ஒட்சிசன் வாயு
3.தகனத்திற்குள்ளாகும் பொருள் (எரியக் கூடிய பொருள்) தகனிக்கத்தக்க பொருள் எனப்படும்.
4.கந்தகம், சீனி, கடதாசி, நப்தலீன் உருண்டை, தார், பெற்றோல், மண்ணெண்ணெய்
5.தகனமடையாத (எரியாத) பொருட்கள் தகனிக்காத பொருட்கள் எனப்படும்.
6.கன்னார், கல், மண், கண்ணாடி
7.தகனிக்கத்தக்க பொருள்கள் வளியிலுள்ள தகனத்துணையியுடன் இரசாயனத் தாக்கமடைதல் தகனம் எனப்படும்.
8.தகனிக்கத்தக்க பொருளொன்று வளியில் எரிய ஆரம்பிப்பதற்குத் தேவையான வெப்பநிலை எரிபற்று நிலை எனப்படும்.
9.விரைவில் தீப்பற்றக் கூடிய பொருள்கள்
10.
1.தகனிக்கத்தக்க பொருளாக இருத்தல்
2.தகனத்துணையி கிடைத்தல் (ஒட்சிசன்)
3.தகனிக்கத்தக்க பொருள் எரிபற்று நிலையை அடைதல்

**06.**
1.தீ ஏற்படுவதற்கு ஏதுவான காரணிகளை அகற்றுதல்
2.தீ ஏற்படுவதற்குத் தேவையான காரணிகளைத் தொடர்புபடுத்தி வரையப்பட்ட அமைப்பு தீ முக்கோணி எனப்படும்.
3.
1. தீயை அணைப்பதற்குத் தகனத்துணையியை அகற்றுதல்
2.எரிபற்றி நிலையை அடைவதைத் தடுத்தல்
3.எரியக் கூடிய பொருளை அகற்றுதல்
4.எரியும் பொருளின் மீது நீரை ஊற்றுதல், மணல் ஈரச் சாக்கை எரியும் பொருள் மீது இடல்.
5.நீரானது ஆவியாகத் தேவையான வெப்பத்தை தணலில் இருந்து பெறுவதானால் எரியும் பொருளின் வெப்பநிலை அதன் எரிபற்று நிலையை விடக் குறைகின்றது.
6.எரியும் பொருளுக்கும் தகனத்துணையியான வளிக்கும் இடையிலான தொடர்பு நீக்கப்படுவதற்காக.
7.ஓடும் போது ஒட்சிசன் வாயு மேலும் கிடைப்பதனால் தீ மேலும் பரவும்.
8.மின்னிணைப்புகளில் ஏற்படும் தீ, எண்ணெய் எரிவதால் ஏற்படும்.

**07.** 1.தகனம் அடையும்போது வெப்ப சக்தியையும், ஒளிச் சக்தியையும் பெற்றுக் கொள்வதற்காகப் பயன்படுத்தப்படுவன எரிபொருள்கள் எனப்படும்.
2.
1.திண்ம எரிபொருள் – விறகு, சிரட்டை, மெழுகு, தேங்காய் மட்டை
2.திரவ எரிபொருள்கள் – மண்ணெண்ணெய், பெற்றோல், டீசல், தேங்காய் எண்ணெய்
3.வாயு எரிபொருள்கள் – திரவ பெற்றோலிய வாயு (LPGAS) நிலக்கரிவாயு மெதேன் வாயு (உயிர்வாயு)
3.காபன், ஐதரசன்
4.
a. காபனீரொட்சைட்டு வாயு ($CO_2$), நீராவி ($H_2O$)
b.காபனீரொட்சைட்டு வாயு – நிறமற்ற தெளிந்த சுண்ணாம்பு நீரைப் பால் நிறமாக மாற்றும். சுண்ணாம்பு
நீராவி வெண்ணிறமான நீரற்ற செப்புசல்பேற்றை நீல நிறமாக மாற்றும்.
c.நீராவியினை ஒடுக்குவதற்கு
d. ஏற்கனவே உள்ள வளியை அகற்ற.

08.01.
1.போதுமான அளவு கிடைக்காத போது
2.காபனீரொட்சைட்டு, நீர்
3.குறைவு
4.பன்சன் சுவாலை
02.
1.பிரகாசமான வலயம்
2.நீல நிற வலயம்
3.கண்ணுக்கு புலப்படாத வலயம்
4.கருநீல நிற வலயம்
5.இருண்ட வலயம்
6.வளி செல்லும் துவாரம்

**09.**
1.உலோகங்களை நீண்ட காலம் வளியில் திறந்து வைக்கும் போது அதன் பளபளப்பு குறைதல் உலோகம் மங்கலடைதல் எனப்படும்.
2.துரு
3.இரும்பு துருப்பிடித்தல்
4.உலோகம் மங்குதலடைதல், இரும்பு துருப்பிடித்தல் காரணமாக உலோகங்களின் மேற்பரப்பு அரிப்புக்குள்ளாதல் உலோக அரிப்பு எனப்படும்.
5.இரசாயன மாற்றம் / இரசாயனத் தாக்கம்.

**10.** 01.
1.துருப்பிடித்தலிற்கு வளி அவசியம் எனக் காட்டல்
2.தொகுதி A
3.கொதித்தாறிய நீரில் கரைந்துள்ள வளி முற்றாக அகற்றப்பட்டமையால், இரும்பாணிக்கு வளி கிடைக்காமல் துருப்பிடிக்கவில்லை.
4.நீரை வெப்பமேற்றும்போது நீரில் கரைந்துள்ள வளி அகற்றப்படும்.
5.வளி நீருடன் தொடுகையுறுவதைத் தடுப்பதன் மூலம் வளி நீரில் கரைவதை தடுக்கிறது.
6.தொகுதி B, C
7. வளி காணப்படுவதால்
8. தொகுதி A – குளிர் நீரில் கரைந்துள்ள வளியால்
தொகுதி B – வெளிச் சூழலிலுள்ள வளி மூலம்
9.இரும்பு துருப்பிடித்தலுக்கு வளி அவசியம்.

(21 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றைய வினாக்களுக்கான விடைகள்

தரம் - 8 | விஞ்ஞானம் | அலகு 08

(20 ஆம் தொடர்ச்சி)

**02.**

1.குழாயின் வெயியே
2.குழாயின் உள்ளே
3.பரிசோதனைக் குழாயின் உள்ளே உள்ள வளியிலுள்ள நீராவியை உறிஞ்சுவதற்கு
4.வளி இறுக்கமடையச் செய்வதனூடாக ஈரமான வளி குழாயினுள் செல்லாதிருக்க
5.கல்சியம் குளோரைட் பரிசோதனைக் குழாயினுள் உள்ளே உள்ள நீராவியை உறிஞ்சுவதால் இரும்பாணிக்கு துருப்பிடிக்க தேவையான நீராவி கிடைக்காமையால் குழாயின் உள்ளே காணப்படும் இரும்பாணிகள் துருப்பிடிக்கவில்லை.
6.கூரான பகுதி,ஆணியின் தலை ஆகிய இரு பகுதிகளிலும் துருப்பிடிப்பதில் மாற்றம் காட்டப்படுவதில்லை என்பதை நிரூபிக்க
7. துருப்பிடித்தலிற்கு நீராவி அவசியம்

**03.**

1.
1. இரும்புத் தூள் துருப்பிடித்திருந்தது
2. குழாயின் உயரத்தின் 1/5 பகுதிக்கு நீர் உயர்ந்திருந்தது.
2.21% (1/5 பகுதி)
3.ஐந்தில் ஒரு பகுதி (1/5)
4.இரும்பு துருப்பிடித்தலிற்கு ஒட்சிசன் வாயு அவசியம்
5.வளியின் கனவளவில் (1/5) பங்கு ஒட்சிசன் வாயு இருப்பதன் காரணமாக நீரானது (1/5) பங்கு உயர்ந்துள்ளது,இவ்வாறு நீர் மட்டம் உயர்ந்தமைக்கு காரணம் குழாய் B யில் உள்ள இரும்புத் தூள் துருப்பிடிப்பதற்கு குழாய் B யில் உள்ள வளியில் காணப்படும் ஒட்சிசன் வாயு பயன்பட்டமையி னால் ஆகும்.
6.ஒட்சிசன்,நீர்

**04**

1.நீர், வளி (ஒட்சிசன்) ஆகியவை இரும்புடன் தொடர்புபடுவதைத் தடுப்பதன் மூலம்
2. 1 – தீந்தை பூசுதல்
2 – கிறீஸ் பூசுதல்
3 – கல்வனைஸ் படுத்தல்
4 – வெள்ளீயம் பூசுதல்
3. இரும்பின் மீது நாக உலோகம் முலாமிடப்பட்ட பொருள்கள்
4.நாக உலோகம் கீறலுக்கு உட்பட்டு இரும்பு வளியுடன் தொடர்புபட்டாலும் இரும்பு துருப்பிடிப்பதில்லை
5.இவை அடைக்கப்படும் தகரங்களின் மேல் வெள்ளீயம் பூசப்பட்டமையால் பேணியில் கீறல் ஏற்படும் போது இரும்பு வளி நீருடன் தொடர்புற்று விரைவாகத் துருப்பிடிக்கும் எனவே இரும்புத்துரு உணவில் கலக்கும் போது அவ்வுணவு ஆபத்தானதாக மாறும்.

**11.**

1. 1 – பரிசோதனைக் குழாய்த் தாங்கி
2 – பரிசோதனைக் குழாய்
2. 1 – நீலம்
2 – சிவப்பு
3 – நிறமாற்றம் இல்லை
4 – 7ஐ விட கூடிய பெறுமானம்
5 – 7 இற்கு அண்மித்த பெறுமானம்
6 – இளம் சிவப்பு
7 – நிறமாற்றம் இல்லை
3. 1 – மூலம்
2 – அமிலம்
3 – நடுநிலை

**12.**

1. a – கூம்புக்குடுவை b – குழாயி
2.இளம் சிவப்பு நிறம் தோன்றியது
3. சோடியம் ஐதரொட்சைட்டு கரைசல் ஓர் காரக்கரைசல் என்பதால் பினோப்தலின் காட்டியுடன் இளஞ்சிவப்பு நிறமாற்றத்தைக் காட்டும்.
4.இளஞ்சிவப்பு நிறம் படிப்படியாக குறைவடையும்
5.அமிலம் சேர்ப்பதால் சோடியம் ஐதரொட்சைட் கரைசலின் மூல இயல்பு குறைவடையும்.
6. சோடியம் ஐதரொட்சைட் கரைசலின் மூல இயல்பு முற்றாக நீங்கி நடுநிலையான பதார்த்தம் உருவாகியமை
7.நடுநிலையாக்கல் பரிசோதனை
8.மூலத்திற்கு அமிலம் சேர்க்கப்படும் போது அல்லது அமிலத்திற்கு மூலம் சேர்க்கப்படும் போது அவற்றின் அமில,மூல இயல்புகள் படிப்படியாக குறைந்து ஒரு சந்தர்ப்பத்தில் முற்றாக நீங்கி நடுநிலைப் பதார்த்தம் உருவாகும் செயன்முறை நடுநிலையாக்க செயன்முறை எனப்படும்.
9.சோடியம் குளோரைட்டு,நீர்
10.நடுநிலையாக்கல் தாக்கம்
11.ஐதரோக்குளோரிக் அமிலம், சோடியம் ஐதரொட்சைட்
12.
1 – இரைப்பையில் அமிலத்தன்மையை போக்க மக்னீசியப் பால் பருகுதல்
2 – தேள் கடித்த அமில நச்சை நீக்க சுண்ணாம்பு எனும் மூலம் பூசல்
3 – குளவி கொட்டியதும் (மூலநஞ்சு) புளி,வினாகிரி (அமிலம்) பூசல்
4 – அமிலத் தன்மையான மண்ணிற்கு சுண்ணாம்பு இடல்
13. டொலமைற்று

ஆக்கம் - செல்வி ஜெனுஷியா கில்பேட் குணம்
கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யா/செங்குந்த இந்துக் கல்லூரி)
யா/தேசிய கல்வியியற் கல்லூரி
வழிகாட்டலும் ஆலோசனையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்
ஓய்வுநிலை விரிவுரையாளர்
யா/தேசிய கல்வியியற் கல்லூரி

## வன்னி ஏழைக் குடும்பத்துக்கு படையினரால் மேலும் ஒரு வீடு



இராணுவத் தளபதியின் அறிவுறுத்தல்களின் படி வன்னி பாதுகாப்புப் படையினரின் மற்றொரு சிவில் சமூக சார் திட்டத்தின் கீழ் வீடற்ற ஏ. ரவீந்திர ரணசிங்கவுக்கான புதிய வீடு கட்டுவதற்கான அடிக்கல் கடந்த 11 ஆம் திகதி நாட்டப்பட்டது.

1, 9 மற்றும் 11 வயதில் மூன்று பிள்ளைகளுடனான பயனாளி சரியான தங்குமிடம் இல்லாது நிறைய கஷ்டங்களை அனுபவித்தமை படையினரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டமையை அடுத்து இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

212 ஆவது பிரிகேட் தளபதியின் வேண்டுகோளின் பேரில் ஹோமாகம பகுதியில் வசிக்கும் நன்கொடையாளர் ரசித் மனதுங்க, அவர்களது முழு வீட்டுக்குமான மூலப்பொருள் நன்கொடையுடன் 5 ஆவது இலங்கை தேசிய பாதுகாவல் படையின் படையினரின் மனித வளம் மற்றும் தொழில்நுட்ப திறன்களைப் பயன்படுத்தி வீட்டைக் கட்டும் பணி மேற்கொள்ளப்படுகின்றனர்.

வன்னி பாதுகாப்புப் படை தலைமையக தளபதியின் ஆசீர்வாதத்துடன் 21 ஆவது படைப்பிரிவின் தளபதி மற்றும் 212 ஆவது பிரிகேட் தளபதி ஆகியோரின் வழிகாட்டுதலின் பேரில் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

21 ஆவது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் மொகான் ரத்நாயக்க, 212 ஆவது பிரிகேட்டின் தளபதி பிரிகேடியர் ரொஹான் ராஜபக்ஷ, சில அதிகாரிகள் மற்றும் சிப்பாய்கள் சுகாதார வழிகாட்டுதல்களைக் பின்பற்றி வீடு நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் பங்குப்பற்றினர். இந்த நிகழ்ச்சியில் பயனாளியின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஒரு சில கிராம மக்களும் இணைந்து கொண்டனர்.

## தாய், தந்தை, மகன் கொரோனாவுக்கு சாவு



கொவிட் தொற்றுக்கு உள்ளாகி ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் உயிரிழந்த சம்பவம் ஒன்று பேராதனை முருததலாவ பிரதேசத்தில் பதிவாகி உள்ளது.

ஒரே குடும்பத்தை சேர்ந்த 72 வயதுடைய தந்தை, 70 வயதுடைய தாய் மற்றும் 38 வயதுடைய அவர்களுடைய மகன் ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொவிட் தொற்றுக்கு உள்ளான பின்னர் குறித்த மூவருக்கும் பல சந்தர்ப்பங்களில் மூச்சுத் திணறல் ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குறித்த மூவரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளனர் என சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேற்படி குடும்பத்தைச் சேர்ந்த மேலும் மூன்று பேருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவர்கள் பெனிதெனிய சிகிச்சை மத்திய நிலையத்தில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## புதைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி ஒன்று கண்டுபிடிப்பு



தங்கல்ல, நாகுலுகமுவ பகுதியில் உள்ள வீடொன்றின் பின்னால் புதைத்து வைக்கப்பட்டிருந்த ரி56 ரக துப்பாக்கி ஒன்று மற்றும் அதற்கான தோட்டாக்கள் 13 பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சுபுன் புத்திக எனும் வலஸ்கல சுபுன் என்பவரின் தோட்டத்துக்கு அருகில் உள்ள தோட்டம் ஒன்றிலேயே குறித்த துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வலஸ்கல்ல சுபுன் என்பவர் 2018 ஆம் ஆண்டு நால்வரை கொலைசெய்த சம்பவம் தொடர்பில் பிரதான சந்தேகநபராக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட துப்பாக்கி குறித்த கொலை சம்பவத்திற்கு பயன்படுத்தி விட்டு மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு திங்கள் முதல் தடுப்பூசி வழங்கல்

நாளை (திங்கட்கிழமை) முதல் 60 வயதுக்கும் அதிகமானவர்களுக்கு கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டத்தை விரைவுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர் வைத்தியர் பிரசாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

அதன்படி, அனைத்து பிரதான வைத்தியசாலைகளிலும் தடுப்பூசி மத்திய நிலையம் ஒன்றை ஆரம்பிக்க உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் –

அடுத்த திங்கட்கிழமை முதல் ஒவ்வொரு பிரதான வைத்தியசாலைகளிலும் தடுப்பூசி மையத்தைத் திறக்க திட்டமிட்டுள்ளோம். 60 வயதிற்கு மேற்பட்ட அனைத்து குடிமக்களுக்கும். இது தினசரி மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டம். இதற்காக அடையாள அட்டை மட்டுமே தேவைப்படுகிறது. நாம் விண்ணப்பப்படிவம் ஒன்றை வெளியிட்டுள்ளோம். குறித்த விண்ணப்பப் படிவத்தை வீட்டிலேயே நிரப்பி வந்தால் தடுப்பூசியை மிக விரைவாக பெற்றுக்கொடுக்க முடியும். – என்றார்.

# வட கிழக்கு ஆயர் மன்றம் யாருக்கும் எதிரானதல்ல அது செயற்பாடு மூலம் தெளிவாக்கப்பட வேண்டும்

## கலாநிதி எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகள்

**ஆசிய இறையியலாளராக மதிக்கப்படும் எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளாரிடம் தற்போது அதிகம் பேசப்படும் வட கிழக்கு ஆயர் மன்றம் பற்றிக் கலந்துரையாடி அவரின் கருத்துக்களைக் காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களுக்குத் தருகிறோம்.**

முன்னாள் யாழ் ஆயர் மேதகு கலாநிதி வ.தீயோகுப்பிள்ளை ஆண்டகை இலங்கையில் யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை – மட்டக்களப்பு ஆகிய இரு மறைமாவட்டங்களே இருந்த நேரத்தில் அந்த இரண்டு மறைமாவட்டங்களின் இணைப்பைக் கேட்ட போது சிலாபம் மறைமாவட்ட ஆயராக இருந்த மேதகு கலாநிதி பிராங் மாக்கஸ் பர்ணாண்டோ ஆண்டகை ஈழம் திருச்சபை கேட்கிறார்கள் என்றார். அப்போது இளங்குருவாகப் பணியாற்றிய எனக்கு அவரின் வார்த்தைகள் இன்னும் ஞாபகமாய் இருக்கின்றன.

### தமிழ்நாடு பாரிய பலம்

தமிழ்க் கத்தோலிக்க திருச்சபைக்கு தமிழ்நாடு எப்போதும் பாரிய பலமாக இருக்கும்.

அந்தக் காலத்தில் ஆயர் பேரவை எப்போதும் பெரும்பான்மை இனத்தவரான சிங்களவரின் தேவைகள், பிரச்சினைகள் பற்றியே கருத்தாய் இருந்தது. இதனைக் கண்ணுற்றே தீயோகுப்பிள்ளை ஆண்டகை தமிழ் மறைமாவட்டங்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் பற்றிக் கலந்தாலோசிக்க வேண்டும் என்ற நோக்குடன் யாழ்ப்பாணம், திருகோணமலை – மட்டக்களப்பு ஆகிய இரு மறைமாவட்டங்களையும் இணைக்க வேண்டும் என்றார். அந்த நேரத்தில் சிங்கள ஆயர்கள் தமது மொழி, கலை, கலாசாரம் போன்ற பிரச்சினைகளிலேயே அதிக கவனம் செலுத்தினர். இதற்கு முக்கிய காரணம் அவர்களுக்குத் தமது மொழி, கலை,கலாசாரம் பற்றிது துணை நாடிப்போக யாரும் இருக்கவில்லை. தமிழ்க் கத்தோலிக்க திருச்சபைக்கு இந்தியாவின் தமிழ்நாடு பாரிய பலமாக இருந்தது.

ஆயர் தீயோகுப்பிள்ளை ஆண்டகையின் சிந்தனை அப்போது பெரிதும் எடுபடாது போன போதும் அது பெரிய விடயமாகத் தெரியவில்லை. இதற்கு முக்கிய காரணம் இலங்கைத் தமிழ்க் கத்தோலிக்க திருச்சபைக்கு மதம்,மொழி, கலை, கலாசாரம் அனைத்திலும் உதவிக்கரம் நீட்ட இந்தியாவின் தமிழ்நாடு இருந்தது.

குருமாணவர்களும் மறைஆசிரியர்களும் இந்தியா சென்று பயிற்சி பெற்றனர். கத்தோலிக்க சமயப் புத்தகங்கள், வேதாகமம் போன்ற வெளியீடுகள் அனைத்தையும் தமிழ் நாட்டில் இருந்து பெறக்கூடியதாக இருந்தது. மறையுரையாற்றவோ, இறையியல் கற்பிக்கவோ குருக்களை இந்தியாவில் இருந்து அழைக்கக் கூடியதாக இருந்தது.

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்



மதுரை உயர் மறைமாவட்ட அப்போதைய பேராயர் மேதகு கலாநிதி ஆரோக்கியசாமி ஆண்டகை ஒரு தடவை உங்கள் இலங்கை நாட்டு தமிழ் ஆயர்கள் ஏன் தமிழ்நாட்டிற்கு வருவதில்லை என்று கேட்டார். இரண்டு விடயங்கள். ஒன்று தமிழ் ஆயர்களுக்கு தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய தேவை இருக்கவில்லை. அனைத்தையும் இலகுவாக இலங்கையில் இருந்தவாறு பெறக்கூடியதாக இருந்தது. மற்றது இலங்கைத் தமிழ் ஆயர்கள் தமிழ்நாட்டு ஆயர்களுடன் நெருங்கிய உறவையும் தொடர்பையும் கொண்டிருப்பது இலங்கை தமிழ் ஆயர்கள் தம்மை விட்டுப் பிரிந்து இந்திய ஆயர்களுடன் இணைகிறார்கள், தம் மொழி சார்ந்து நிற்கிறார்கள் என்ற எண்ணப்பாட்டை ஏற்படுத்தும் எனத் தமிழ் ஆயர்கள் சிந்தித்தனர்.

### வட கிழக்கு ஆயர் மன்றம் பிரகடனப்படுத்தப்பட முன்னர் வாழ்ந்து காட்டப்பட வேண்டும்

வட கிழக்கு ஆயர் மன்றம் இணைப்புப் பிரகடனப்படுத்தப்பட முன்னர் அது பகிர்ந்து வாழ்ந்து காட்டப்பட வேண்டும்.

முதலில் வட கிழக்கு ஆயர் மன்றம் இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவைக்கு எந்த வகையிலும் எதிரானதல்ல, மாறாக அதன் பணிகளை இலகுபடுத்தி இன்னும் பலம் கொடுப்பதற்கே என்பது தெளிவாக்கப்பட வேண்டும். தமிழ் மறைமாவட்டங்களுக்கிடையில் சமத்துவம், சகோதரத்துவம், புரிந்துணர்வு, ஒற்றுமை என்பன உறுதியாகவும் உண்மையாகவும் பகிரப்பட வேண்டும். பங்கு மற்றும் பணிகளுக்கும் குருக்களை இந்த நான்கு மறைமாவட்டங்களும் பகிர்ந்து கொள்ளலாம்.

### நான்கு தமிழ் மறைமாவட்டங்களின் இணைப்பு என்பது கடினமான ஒன்று

நான்கு தமிழ் மறைமாவட்டங்களின் இணைப்பு என்பது கடினமான அதேவேளை மென்மையான ஒன்று. பெரிய மறைமாவட்டம் – சிறிய மறைமாவட்டம் – பலம் பொருந்திய மறைமாவட்டம் – வளமான மறைமாவட்டம் – பிரதேச ரீதியாக முக்கிய மறைமாவட்டம் என்ற எண்ணங்கள் முக்கியத்துவம் பெறக்கூடாது. ஊடக மற்றும் தொடர்புத்துறை இங்கு முக்கிய இடம் பிடிக்க வேண்டும். காலைக்கதிர்நாளிதழில்ஞாயிறு தினங்களில்வெளியாகும் கிறிஸ்தவ செய்தி இதழ் வட கிழக்கு ஆயர் மன்றம் பற்றித் தொடராக ஆக்கங்களை வெளியிடுவது போல், யாழ்ப்பாணம் மறைமாவட்ட 'பாதுகாவலன்' பத்திரிகை – மட்டக்களப்பு மறைமாவட்ட 'வெட்டாப்பு' பத்திரிகை – மன்னார் மறைமாவட்ட 'மன்னா' பத்திரிகை – திருகோணமலை மறைமாவட்ட 'திருமலைத்தீபம்' பத்திரிகை ஆகிய நான்கு தமிழ் மறைமாவட்ட பத்திரிகைகளிலும் இது பற்றிய ஆக்கங்கள் வெளிவர வேண்டும். நான்கு தமிழ் மறைமாவட்ட பத்திரிகைகளிலும் நான்கு மறைமாவட்டச் செய்திகளும் முக்கியத்துவத்தின் அடிப்படையில் வெளிவர வேண்டும். செய்திகளை மட்டுமல்ல வளங்களையும் வசதிகளையும் பகிர வேண்டும்.

### பெரிய குருமடம் பற்றிய சிந்தனை

பகிர்வு பற்றிக் குறிப்பிடும் போது பெரிய குருமடம் பற்றிய சிந்தனை எழுகிறது. அன்றைய யாழ் ஆயர் மேதகு கலாநிதி தீயோகுப்பிள்ளை ஆண்டகை 1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் பின்னர் பாதுகாப்புக் கருதி கொழும்புத்துறையில் பெரிய குருமடத்தை ஆரம்பிக்க முற்பட்ட போது அனைத்து சிங்கள ஆயர்களும் எதிர்த்தனர். திருகோணமலை – மட்டக்களப்பு மற்றும் மன்னார் ஆகிய இரு மறைமாவட்ட அருட்சகோதரர்கள் ஆரம்பத்தில் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரிக்குக் கல்வி கற்க வந்தாலும் பின்னர் போக்குவரத்துப் பயம் மற்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காக வருவதை நிறுத்திக் கொண்டனர். இந்த மறைமாவட்டங்களின் அருட்சகோதரர்கள் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரிக்குத் திரும்பவும் கல்வி கற்க வருவதோடு இந்த ஒவ்வொரு மறைமாவட்டங்களில் இருந்தும் குருக்கள் பயிற்சியாளர்களாக இங்கு வந்து பணியாற்ற வேண்டும்.

நான் கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியில் இருந்து கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரிக்கு அதிபராக வந்த பின்னர் கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியுடனான தொடர்பைப் பேணி வந்தேன். அங்கு அதிபராக இருந்த ஜோடி மெல் அடிகளாரை காடினல் நியுமன் மன்றத்திற்கு பிரதம விருந்தினராக அழைத்தேன். பெயர் போன மெய்யியற்துறை விரிவுரையாளரான பணடிதரட்ணா அடிகளாரை கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரிக்கு விரிவுரைகளுக்கு அழைத்து வந்தேன். நானும் கண்டி தேசிய குருத்துவக் கல்லூரிக்கு வருகை விரிவுரையாளராகச் சென்று வந்தேன்.

கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி அருட்சகோதரர்களின் மெய்யியல் மற்றும் இறையியல் இளங்கலைமாணி பட்டத்திற்காகவும் உரோமையில் இருந்து பெறப்படும் நிதிக்காகவும் நாம் இன்னும் உரோமாபுரியில் தங்கியிருக்க வேண்டி இருக்கிறது. உரோமாபுரி தனது விருப்பப் பாடங்களைத் தருவதிலேயே கவனம் செலுத்துகிறது. கீழைத்தேச நாடுகளின் தேவைகளை நிறைவு செய்யக்கூடியதாக இந்தியா பூனே குருத்துவக் கல்லூரியில் கல்வி கற்று மெய்யியல் – இறையியல் இளங்கலைமாணி மற்றும் முது கலைமாணிப் பட்டங்களைப் பெறுவது சிறப்பாகும்.

### இன்னும் பல அறிக்கைகள் மனிதாபிமான அடிப்படையில் வெளிவரவேண்டும்

ஈஸ்டர் தாக்குதல் பற்றி சிங்கள ஆயர்கள் குரல் எழுப்புகின்றனர். அதனை அவர்கள் அரசியலாகக் கருதவில்லை. முள்ளிவாய்க்கால் பற்றி வட கிழக்கு ஆயர் மன்றம் அறிக்கை வெளியிட்டது சிறப்பானது. அது அரசியல் அல்ல. அதேபோல் இன்னும் பல அறிக்கைகள் மனிதாபிமான அடிப்படையில் வட கிழக்கு ஆயர் மன்றத்திடமிருந்து வெளிவரவேண்டும். நான்கு தமிழ் ஆயர்களும் நான்கு மறைமாவட்டங்களுக்கும் அடிக்கடி செல்ல வேண்டும். முக்கிய விழாக்களுக்குத் தலைமை தாங்க வேண்டும். குரு முதல்வர்களும் இவ்வாறே செயற்பட வேண்டும். வட கிழக்கு ஆயர் மன்றம் உரோமைக்கோ சிங்கள ஆயர்களுக்கோ இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவைக்கோ எதிரானதல்ல என்பது முதலில் செயற்பாட்டின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும்.


திருமண தேடலை இலகுவாக்கும் ஒரு முயற்சி
ஆயிரக்ககணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு அரச தனியார் தொழில்புரியும் மணமக்களிலிருந்து உங்களுக்கு பொருத்தமானவர்களை தேர்ந்தெடுக்க வாருங்கள்.
அருந்ததி
இணைய திருமண சேவை
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20 கே.கே.எஸ் வீதி, கொக்குவில்
www.arunthathee.com | +94 777 164 524

காலைக்கதிர் Kalaikkathir

# மீரிகம - குருணாகலை அதிவேக நெடுஞ்சாலை விரைவில் நிறைவு



தற்போது கட்டுமானத்தில் உள்ள மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மீரிகம - குருணாகலை பகுதி சுமார் 3 மாதங்களில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

'வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணி அளவில் நாட்டு மக்களுக்கு விசேட உரை ஒன்றை ஆற்றியபோது ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி -

மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் திட்டமிடப்பட்ட அதிவேக நெடுஞ்சாலை அமைப்பை நிறைவு செய்வது நமது நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு மிக முக்கியமான முதலீடாகும்.

எனவே, முந்தைய ஆட்சியின் போது மந்தமாகி இருந்த இந்தத் திட்டத்தை நாங்கள் மீண்டும் விரைவு படுத்தியுள்ளோம்.

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மீரிகம - குருணாகலை பகுதி தற்போது கட்டுமானத்தில் உள்ளது.

இது சுமார் 3 மாதங்களில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சுமார் 15 கி.மீ. நீளமுள்ள கடவத்தை - மீரிகம பகுதி 2023 இறுதிக்குள் நிறைவடையும்.

குருணாகலை தம்புள்ளை பகுதியும் விரைவில் திறக்கப்படும்.

கண்டி நோக்கிச் செல்லும் வீதியின் பொத்துஹெர முதல் கலகெதர வரையிலான வீதியின் முக்கியமான பகுதி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், 2023இற்குள் நிறைவடைய உள்ளது.

அதன்படி, 2024இற்குள், மக்கள் மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் கொழும்பிலிருந்து கண்டிக்குச் செல்ல வாய்ப்பு கிடைக்கும். என்றார்.

## 6 பிள்ளைகளின் தந்தை யானை தாக்கியதில் சாவு

மட்டக்களப்பு - இலுப்பட்டிச்சேனை பகுதியில் யானை தாக்கி 6 பிள்ளைகளின் தந்தையொருவர் உயிரிழந்துள்ளார்.

இதன்போது வண்ணமணி கிருஷ்ணமூர்த்தி என்பவரே இவ்வாறு யானை தாக்கி உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் மரப்பாலம், தலப்புலாவெலி பகுதியில் வயலில் காவல் பார்த்துக்கொண்டிருந்த போதே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதன்போது உயிரிழந்தவரின் சடலம் செங்கலடி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வீதியில் விழுந்து உயிரிழந்த நபருக்கு கொவிட் தொற்று

அம்பலந்தொட திலகபுர ஜலடெங்கிய பிரதேசத்தின் வீதிக்கு அருகில் வீதியில் விழுந்து உயிரிழந்த நபருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை அடுத்து உயிரிழந்த நபர் வசித்து வந்த வீடு மற்றும் அவர் சென்று வந்த 4 வீடுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என திலகபுர பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

64 வயதுடைய குறித்த நபர் வீதியில் மயங்கி விழுந்ததன் பின்னர் அவரின் புதல்வர்கள் இருவர் அவருக்கு செயற்கை சுவாசத்தை வழங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, எஹலியகொடை பிரதேசத்தில் புதிதாக 35 கொவிட் தொற்றாளர்கள் பதிவாகி உள்ளனர். இவர்கள் அனைவரும் போபெத்த, இத்தமல்கொட மற்றும் கெடஹெத்த பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## அரிசித் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

இலங்கையில் இன்னும் ஒரு மாதத்துக்கு மாத்திரமே நுகர்வோருக்கு அரிசி கொள்வனவு செய்ய சந்தர்ப்பம் கிடைக்கும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதற்கமைய நாட்டில் எதிர்வரும் நாள்களில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நெல் ஆலை உரிமையாளர்கள் வழங்கிய தரவுகளுக்கமைய இந்த விடயம் தெரியவந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதனால் உடனடியாக ஒரு லட்சம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்தால் மாத்திரமே தட்டுப்பாட்டை தவிர்க்க முடியும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 182 கிலோ கேரள கஞ்சாவுடன் நபர் ஒருவர் பூநகரியில் கைது

**182 கிலோ கேரள கஞ்சாவுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.**

**பூநகரி இராணுவ புலனாய்வு பிரிவிற்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.**

**58 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.**

## கொழும்புக்கு அப்பால் கடற்பரப்பு பாதிப்புக்களை கணிப்பிடும் செயற்பாடுகளில் ஈடுபடுகிறது இந்தியா

இலங்கை கடற்பரப்பில் தீவிபத்திற்குள்ளான எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் மூலம் கொழும்புக்கு அப்பாலுள்ள கடற்பரப்பில் ஏற்பட்டிருக்கும் தாக்கங்களை கணிப்பிடுவதற்கு ஒத்துழைப்பை வழங்குவதற்காக இந்திய கடற்படையின் ஆய்வு கப்பலான சர்வேக்ஷாக் வியாழக்கிழமை கொழும்பை வந்தடைந்தது.

இக்கப்பலின் வருகை இரு அயல் நாடுகளுக்கும் இடையிலான நெருங்கிய உறவுகள் மற்றும் பல்லாயிரம் ஆண்டுகள் பழைமையான நட்புறவில் மற்றொரு வெற்றிகரமான அத்தியாயமாக அமைந்துள்ளது.

இந்தக் கப்பல் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட சைட்ஸ்கான் சோனர் உட்பட ஆய்வு உபகரணங்கள் பொருத்தப்பட்டதாகும் என்று கொழும்பிலுள்ள இந்திய உயர் தூதரகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு துறைமுகத்துக்கு அப்பால் உள்ள கடற்பரப்பில் கடற்பயணங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கத்தால் விடுக்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வமான கோரிக்கையின் அடிப்படையில் ஐ.என்.எஸ் சர்வேக்ஷாக் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அமைப்பு (நாரா), இலங்கை கடற்படை மற்றும் இந்திய கடற்படை ஆகியவற்றின் ஒன்றிணைவில் இந்தக் கூட்டு ஆய்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இந்த ஆய்வுப் பணியில் மேலதிக திட்டங்கள் தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை திட்டமிடல் சந்திப்பொன்று நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் நாரா நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஏ. நவரட்னராஜா, நாரா பணிப்பாளர் நாயகம் டாக்டர் எச்.எம்.பி.கித்சிறி, இலங்கையிலுள்ள இந்திய உயர் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் விகாஸ் சூத் மற்றும் இலங்கை கடற்படையின் கப்டன் விஜேசூரிய ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஒபரேன்சாகர் ஆரக்ஷா 2 இன் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் இக்கூட்டு நடவடிக்கை இந்தப் பிராந்தியத்தில் பாதுகாப்பான கடற்பயணத்துக்கு உறுதுணையாக இருக்கும் அதேநேரம், இந்து சமுத்திர பிராந்தியத்தில் ஏற்படும் இதுபோன்ற அனர்த்தங்களைத் தணிப்பதற்கு விரைந்து ஆதரவை வழங்குவதற்கான இந்தியாவின் அயலவர்களுக்கு முதலிடம் கொள்கையை மேலும் வலுப்படுத்துவதாக அமைவதாகவும் இந்திய உயர் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

## நான் எந்தத் தவறும் செய்யவே இல்லை!

### அடித்துக் கூறுகின்றார் ஷானி அபேசேகர

தான் எந்தத் தவறையும் செய்யவில்லை என்றும், உண்மை வெளியாகும் என்றும், குற்றப் புலனாய்வுத் துறையின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர தெரிவித்துள்ளார்.

குற்றவியல் புலனாய்வுத் துறையின் முன்னாள் பணிப்பாளரான ஷானி அபேசேகர, தொழில் அதிபர் மொஹமட் ஷியாம் கொலை வழக்கில், முன்னாள் துணை காவல்துறை கண்காணிப்பாளர் வாஸ் குணவர்தன, அவரது மகன் மற்றும் நான்கு காவல்துறை அதிகாரிகளுக்கு எதிரான வழக்கில் பொய்யான சாட்சிகளை முன்னிலைப்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இதன் காரணமாக அவர் பல மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டார். எனினும் மேன் முறையீட்டு நீதி மன்ற தலையீட்டால் சில நாள்களுக்கு முன் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இந்தநிலையில் உண்மை மேலோங்கும் என்று ஷானி அபேசேகர அல் ஜசீராவிடம் செய்தி சேவையிடம் கூறியுள்ளார். தாம் ஒரு நேர்மையான மற்றும் கடின உழைப்பாளி. தாம் முழு வாழ்க்கையிலும், எந்த தவறும் செயதவனல்லன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

'தங்கள் மனசாட்சிக்கு ஏற்ப வாழ்பவர்கள் எதையும் எதிர்கொள்வது கடினம் அல்ல. அவர்கள் ஏதாவது தவறு செய்தால், அவர்கள் தண்டனையை எதிர்கொள்ள வேண்டும் என்பதை அவர்கள் அறிவார்கள் என்றும் ஷானி அபேசேகர கூறியுள்ளார்.

இதேவேளை ஷானி அபேசேகரவுக்கு பிணை வழங்கப்பட்டமை தொடர்பாக அல் ஜசீராவிடம் கருத்துரைத்த, இலங்கையின் நீதி அமைச்சர் அலி சப்றி, மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவு, இலங்கையின் ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி எவ்வளவு வலுவானது, நீதித்துறை எவ்வளவு சுதந்திரமானது' - என்பதைக் காட்டுகிறது என்று தெரிவித்துள்ளார்.

அபேசேகர மீதான குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்ற நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பாகக் கேட்டபோது, இந்த அவதானிப்பை காவல்துறையினர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நீதி அமைச்சராக தாம் காவல்துறையை வழி நடத்துவதில்லை. குற்றச்சாட்டுகளுக்கு போதுமான ஆதாரம் இருந்தால், காவல்துறை விசாரணை ஆரம்பிக்க வேண்டும் என்று சப்றி அல் ஜஸீராவிடம் தெரிவித்துள்ளார்.

## தினம் ஒரு விவசாயத் தகவல்

### நன்மை செய்யும் பூச்சிகளை பாதுகாக்கும் முறைகள்

பயிர்களுக்கு நன்மை செய்யும் பூச்சிகளான சிலந்திகள், குளவிகள், பொறிவண்டுகள், தரை வண்டுகள், தேனீக்கள் போன்ற பூச்சிகள் நன்மை அளிக்கின்றன. இப்பூச்சி இனங்கள் பயிரை தாக்கும் தீமை செய்யும் பூச்சிகளை உண்டு வாழ்ந்து. அவை அதிகம் பெருகாமல் பார்த்துக் கொள்கிறது.

**பாதுகாக்கும் முறைகள்:-**

1. இயற்கை எரு, மண்புழு உரம், பசுந்தாள் உரங்கள், முதலியவற்றை பயன்படுத்தி மண்ணில் வாழும். நன்மை செய்யும் பூச்சிகளை பாதுகாக்க வேண்டும்.
2. நெல் பயிருக்கு வரப்புகளில் பயறு வகை செடிகளான பயறு, உளுந்து போன்றவை பயிரிட வேண்டும். அல்லது சூரியகாந்தி முதலியவற்றை விதைத்து நன்மை செய்யும் பூச்சிகளை கவர்ந்து இழுக்கலாம்.
3. பூச்சி மற்றும் நோய் தாக்குதலின் பொருளாதார சேதங்களை அறிந்து தாவரம் சார்ந்த பூச்சி மருந்துகள், நுண்ணுயிர் பூச்சி, பூஞ்சணக் கொல்லிகளை பயன்படுத்த வேண்டும்.
4. பூச்சி மருந்துகளை மாலை நேரங்களில் சரியான அளவில் தெளிப்பதன் மூலம் நன்மை செய்யும் பூச்சிகளை பாதுகாக்கலாம்.
5. இம்முறையினால் மண் வளம் பாதுகாக்கப்படுவதுடன் சுற்றுச்சூழல் மாசடையாமல் பாதுகாக்கப்படுகிறது. தீமை செய்யும் பூச்சிகள் பெருக்கத்தை கட்டுப்படுத்தி பயிர் பாதிப்பு அடைவதைத் தடுக்கலாம்.
6. தென்னந்தோப்பு, சூரியகாந்தி தோட்டங்களில் தேனீ வளர்ப்பு பெட்டிகள் வைத்து, தேனீ வளர்த்து அயல் மகரந்த சேர்க்கையை அதிகப்படுத்தலாம்.

காய்கறி தோட்டங்களில் சுற்றிலும் தேன் மகரந்தங்கள் அதிகம் உள்ள பூக்கள் கொண்ட சோளம், சூரியகாந்தி, எள், கொத்தவரை, வெண்டை போன்றவற்றை விதைத்து நன்மை செய்யும் பூச்சிகளை வரவழைத்து தீமை செய்யும் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி